மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly Navember 2014

விலை : ரூ.10/- இல்லம் : 2 சுற்றம் : 11 ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி



## மானியத்தால் ஏழைகள் வாழ்கிறார்களா?

# தலையங்க விமர்சனம் நூறாவது அமர்வு



NEW

FLAT FOR SALE @ BESANT NAGAR

**4 - in -one luxury Apartment**




Site at :

49, MGR Salai,
**Kalashetr**a Colony,
Besant Nagar,
Chennai.

Suresh & Co.
Engineers & Builders

#22, Ponniamman Koil Street Urur, Adyar, Chennai - 20.

ph:044-24463149
94440 18004
94440 48902

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly December 2014

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**ஜோசுவா**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**ஜூட்**
**பெ. அர்ஜூன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
V.**கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**
அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

மானியங்களால் ஏழைகள் வாழ்கிறார்களா?
*தலையங்கம்*.................... 4

இந்தியா விழிக்க வேண்டும் (கவிதை)
*மெஞ்ஞானி*.................... 6

தாய்மை ( சிறுகதை)
*இருங்கோவேள்*.................... 7

முல்லை நீதான் (கவிதை)
*பாவலர் சீனி. சுந்தரமூர்த்தி*.................... 12

பிரதமர் மோடி மீது
முலாயம் சிங் பரபரப்பு புகார்
*வேர்மகள்*.................... 17

உண்மையைத் தேடி
*இராஜா சிங்*.................... 19

கவனம் தேவை
*உமாமகேஸ்சுவரி*.................... 24

பா.ச.க. அரசின்
சமற்கிருத மோகம்
*வேர்மகள்*.................... 25

மறைக்கப்பட்ட உண்மைகள்
மறுக்கப்பட்ட உரிமைகள்
*தொல்காப்பியன்*.................... 26

சமையல் எரிவாயு மானியம்பெற
*பொன்முடி*.................... 27

தமிழீழம் எனும் நெருப்பு
காசி ஆனந்தன்.................... 28

புரட்சிக் கவி.................... 30


பாலை நிலத்தில் ஒரு
ஆர்டீசியன் ஊற்று!
*அமல்ராஜ்*.................... 31

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# மானியங்களால் ஏழைகள் வாழ்கிறார்களா?

குடிமக்களில் பெரும்பாலானவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்றனர். அவர்களுக்கு உதவ வேண்டும், அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும், அவர்களது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கங்களோடு மானியங்களை அறிவித்து, அவைகளை அமல்படுத்துவது ஆளுகின்ற அரசு களின் வழக்கம். இந்த மானியங்கள் உரியவர் களுக்குப் போய்ச் சேருகிறதா என்பது மிகப்பெரிய கேள்விக்குறி. வழிநெடுக சிந்திச் சிதறி அல்ல, திருடப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டு, இறுதியில் சேர வேண்டியவர்களுக்கு நூற்றில் ஒன்று இரண்டாகப் போய்ச் சேருகிறது.



பல சமயங்களில் சென்று சேர்வதே இல்லை. இப்படிப்பட்ட காரணங்களைக் காட்டி மானியத்தை நேரிடையாக மக்களுக்கே கொடுக்கப் போகி றோம். எல்லோரும் வங்கிக் கணக்குத் தொடங் குங்கள், ஆதார் அட்டை வாங்குங்கள் அப்போது தான் உங்களுக்கு எரிவாயு சிலிண்டருக்கான மானி யம் வழங்கப்படும் என்று அரசு அறிவிக்கிறது

எரிவாயு சிலிண்டர் வாங்க இயலாத எத் தனையோ மக்கள், விறகையும், மாட்டுச்சாணத்தில் தயாரித்துக் கொண்ட வரட்டிகளையும் பயன் படுத்தி சமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் களுக்கெல்லாம் எந்த விதத்தில் மானியம் தரப்படப் போகிறது. இருப்பவர்களுக்கு இன்னும் கொடுக்கப் படுகிறது. இல்லாதவர்களுக் எதுவும் கொடுக்கப் படுவதில்லை. அவர்களைக் கண்டு கொள்வதும் இல்லை என்பதுதான் இந்திய நாட்டின் நிலையாக இருக்கிறது. இது ஒரு எடுத்துக்காட்டுதான். இப்படிப்பட்ட மானியங்கள் பலவற்றை பெற முடியாமல் பல கோடிப்பேர்கள் இருக்கிறார்கள் என்பதை அரசு நினைத்துப் பார்க்க வேண்டும். மண்எண்ணைக்கான மானியத்தை குறைக்கப் போகிறார்களாம். மண்எண்ணையை யார்

பயன்படுத்துகிறார்கள். சாதாராண எளிய மக்கள் தானே, அவர்களை துன்பப்படுத்தும் செயலாக இது தெரியவில்லையா?

நடுவண் அமைச்சர் அருண்ஜேட்லி கூறுகிறார் மானியங்கள் படிப்படியாகக் குறைக்கப்படும் என்று. யாருக்குக் கொடுக்கப்படும் மானியங்கள் குறைக்கப் படப் போகிறது, சாதாரண, ஏழை, எளிய மக்களுக்கு செல்லும் மானி யங்கள்தான் குறைக்கப்படப் போகிறது நிறுத்தப் படப் போகிறது.

மானியங்கள் கொடுக்கப்படும் காலங்களில் கூட, அந்த மானியங்கள் அனைத்தும் உரியவர்களுக்குச் சென்று சேர்ந்ததா என்றால் இல்லை. அரசால் கொடுக்கப் படுகிற மானியங்கள் வருகின்ற வழியில் சிந்திச் சிதறி அல்ல, திருடப்பட்டு, கொள்ளையடிக் கப்பட்டு நூறில் இரண்டு மூன்றுதான் உரியவர் களுக்கு வந்து சேருகிறது. தற்போது அதுவும் இல்லை என்றாகப் போகிறது. இருக்கிறவர்களுக்கு இன்னும் தரப்படும், இல்லாத ஏழை எளிய மக்க ளுக்கு கொடுக்கப் படுவதும் நிறுத்தப்படும் என்பது எந்த குடியுரிமைச் சட்டமோ தெரியவில்லை.

எல்லாவகையான மானியங்களும் குறைக்கப் படுமா? நிறுத்தப்படுமா? என்றால், குடிமக்கள் நேரடி யாகப் பயன்பெறுகிற வகையில் தரப்படும் மானி யங்கள்தான் குறைக்கப்படப்போகிறது என்று தெரிகிறது. இந்தியாவில் தொழில் செய்யும் பன் னாட்டு நிறுவனங்களுக்கு, மின்சாரத்தில் மானியம், இடங்களில் மானியம் என்று பல மானியங்கள் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் ஏழை மக்களின் வாழ்வதாரமான மண் எண்ணெய்க்கான மானியம் குறைக்கப்படுகிறது. தனது கையை குத்திக் கிழித்துவிட்டு, அயலான் கால் களுக்கு ஆலிவ் எண்ணெய் தடவிவிடுவது போலல் லவா இருக்கிறது இது. இச்செயல் எந்த வகையில் நியாயம்?

விவசாயத்திற்கு மானியம் தரப்படவேண்டும். கல்விக்கு தரப்படவேண்டும், மற்றும் அத்தியா வசியமான தேவைகளுக்கு மானியம் தரப்பட வேண்டுமே தவிர, ஆடம்பரத்திற்கும், அயல்நாட்டு முதலாளிகளுக்கும் மானியம் கொடுப்பது எந்த விதத்தில் நியாயம். மானியம் பெறத் தகுதி இல்லா தவர்களுக்கு அரசியல் என்ற பெயராலும், பணக் காரர்கள் என்ற அடாவடித்தனத்தாலும், அதிகார போதையாலும் மானியங்கள் திசை மாறிப் போவதை எந்தக் குடிமகனும், எந்த நல்லாட்சியா ளனும் ஏற்றுக் கொள்ளமாட்டான் என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும். ◆


## முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்

பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-
பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-
கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-
கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-
க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-

சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 120/-

# இந்தியா விழிக்க வேண்டும்

சீனாவின் மண்ணாசைக்கு
சிறிலங்கா பலி!
சிரிக்கிறது உலகம்!
இளஞ்சூட்டுப் பானை உள்ளே
இன்பம் துய்க்கும் ஆமைபோல்
இன்பம் காண்கிறான் ராசபக்சே!
பூர்வ தமிழ்க் குடிகளை
புரிந்து கொள்ளாத சிங்களவன்
பூண்டோடு அழியும் காலம்
புண்ணிய காலமாகும் இனி.

அவர் ஆட்சி இருந்தவரை
அமெரிக்காவாக இருந்தாலும்
அந்நியனாக இருந்தாலும்
அடியெடுத்து வைக்க
அச்சம் இருந்தது.

பிரபாகரன் ஆட்சி இருந்தவரை
அமெரிக்காவாக இருந்தாலும்
அந்நியனாக இருந்தாலும்
ஈழத்தில் அடியெடுத்து வைக்க
அச்சம் இருந்தது அவர்களுக்கு.
இன்றோ விலைமாதுவாகி
வீதியிலே நிற்கிறது சிறிலங்கா.
காசைக்கொடுத்தால்
படுக்கை விரிக்கிறான்
ராசபக்சே.

பொதுவுடைமை பேசும் நாடு
அருணாச்சலப்பிரதேசத்திலும்
சிறிலங்காவிலும்
அதிகாரம் செய்ய
அலைகிறது.
மா சே துங்
மன்னிப்புக் கேட்டு
ஆவியாய் அலைகிறார்.

சீனா, லங்காவை
ஆக்கிரமித்து விடக்கூடாது
ஆதலால் அள்ளிக் கொடுத்தோம்
அந்நியன் ராசபக்சேவுக்கு
சிவப்புக் கம்பளம் விரித்தோம்
சீர் கெட்டவனுக்கு என்கிறது
மோடியின் இந்திய அரசு.

மோடியிடம் வாங்கிக்கொண்டு
சீனாவுக்கு முந்தானை
விரித்துவிட்டான் ராசபக்சே.
வேலுப்பிள்ளை பிரபாகரனின்
விடுதலை எண்ணத்தை
வேரோடு பிடுங்க நினைக்கும்
ராசபக்சே இடது கையில்
இந்தியாவையும்
வலது கையில் சீனாவையும்
வைத்துக் கொண்டு
சர்க்கரைபோல்
நக்கிக் கொண்டு அலைகிறான்.


தமிழரின் நாட்டை
சிங்களனுக்குச் சொந்தமாக்க
சீர்வரிசை அனுப்புகிறது இந்தியா!
சொந்த மக்களை விறகாக்கி
சிங்களவனுக்கு
விருந்து சமைக்கிறது இந்தியா!

ஈழத்தமிழனுக்கு உதவாத இந்தியா
உலக வரைபடத்தில் நிலைக்காது
இந்தியாவும் சீன வரைபடத்திற்குள்
அடங்கிப் போகும் அவலம் நேரும்.
இனியாவது இந்தியா விழிக்க வேண்டும்
தமிழீழம் தனி நாடாய்
உருவெடுக்க உதவ வேண்டும்.

**மெஞ்ஞானி**



சிறுகதை



# தாய்மை

இருங்கோவேள்

“எவளோ ஒருத்தி வாந்திய நான் சொமந்துக்கிட்டு திரியிறேன்“ என்று அம்மா புலம்பியது ஆதிரையின் மனதுக்குள் புகுந்து குழப்பத்தை உண்டு பண்ணியது. ஒரு தனியார் கல்லூரியில் வணிகவியல் முதலாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறாள் ஆதிரை. அம்மா இப்படிச் சொல்வது ஒன்றும் புதிதல்ல. பல முறை சொல்லியிருக்கிறாள். அந்த வாக்கியம் தம்மைத் திட்டுவதற்கான வாக்கியமாக அம்மாவுக்கு கிடைத்திருக்கிறது என்று எண்ணிக் கொள்வாள். ஆனால் அதன் பொருள் புரியாமல் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் இருந்துவிட்டாள்.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலையில் எழுந்த போது மணி ஒன்பதரை. அம்மா பலமுறை எழுப்பிவிட்டாள். கல்லூரிதான் இல்லயேம்மா, நான் தூங்குறேன் விடும்மா என்று கூறி இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்க முயன்றாள். அப்போதுதான் அம்மா சொல்லிச் சென்ற அந்த வார்த்தை அவளைச் சிந்திக்க வைத்தது. அதன் பிறகு அவளுக்கு தூக்கம் வரவில்லை. அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தாள். அம்மாவை விட அப்பா அவளிடம் அன்பாக இருப்பதாக அவளுக்கு எப்போதுமே ஒரு எண்ணம் உண்டு. ஆகவே அப்பாவிடம் இதுபற்றி இன்று கேட்டுவிட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள்.

அப்பா மகிழ்ச்சியாக இருக்கும் தருணத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். முரசு தொலைக்காட்சியில் பழைய படப்பாடல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார் தந்தை. இதுதான் சரியான தருணம் என்று அப்பாவிடம் சென்று அம்மா சொன்னதைச் சொல்லி, அதற்கு என்னப்பா பொருள் என்று கேட்டாள். அவர் சற்றுத் திடுக்கிட்டு, பின்னர் சுதாரித்துக் கொண்டு, “அவ எதையாவது சொல்லுவாம்மா நீ போய் ஒன் வேலையப்பாரு“ என்று கூறிவிட்டு பாடலைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டார். அவரது செவியில் பாடல்கள் கேட்கவில்லை. பழைய நினைவுகள் ஓடத்தொடங்கின.

அவை கசப்பான அனுபவங்கள்தான். அதை ஏன் இவள் இப்பொழுது ஆதிரை யோசிக்கும் விதமாகச் சொன்னாள். இவளுக்கு எத்தனை முறை தான் சொல்வது. சே... என்று மனைவியை மனதுக்குள் திட்டிக்கொண்டே பாடல்களை கவனிப்பது போல் பாவனை செய்து கொண்டிருந்தார்.

ஆதிரைக்கோ இருப்புக் கொள்ளவில்லை. அது என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாகியது. வீட்டில் இருப்பதோ அம்மா, அப்பா, அவள். அப்பா சொல்ல விருப்ப மின்றி இருக்கிறார். அம்மாவிடம் கேட்க முடியாது. சரி நாளை வரை பொறுத்திருப்போம். வகுப்பில் கலா பாட்டி இருக்கிறாள் அவளிடம் கேட்டுக் கொள்ளலாம் என்று முடிவு செய்தாள். கலா அவளுடன் படிக்கும் மாணவி. பாட்டி போல் பேசுவதும், யோசனைகள் சொல்வதும் அவளது இயல்பு.ஆகவே அவளை எல்லோரும் பாட்டி என்று அழைப்பதுதான் வழக்கம்.

அடுத்த நாள் கொஞ்சம் விரைவாகவே கல்லூரி சென்றுவிட்டாள் ஆதிரை. கலாவுக்காக காத்திருந் தாள். அவள் வந்தவுடன் விசயத்தைச் சொன்னாள். கலா கொஞ்சம் அதிர்ந்தவளாய் “என்னடி சொல்றே மறுபடி சொல்லு“ என்று கேட்க ஆதிரை மறுபடி யும் கூறினாள். “உங்க அம்மாவா சொன்னாங்க, இப்படியா சொன்னாங்க“ என்று கவலையுடன் கேட்டாள். ஆமாடி சொல்லுடி என்ன பொருள் என்று கேட்டாள். “ஒன்னுமில்லடி விடுடி“ என்றாள் கலா. ஆதிரை விடுவதாக இல்லை. எதுவாயிருந்தா லும் சொல்லுடி. நீ சொல்லலன்னா நான் உன் கூட எந்தக் காலத்திலும் பேச மாட்டேன் என்று உறுதி யாகக் கூறவும், “நீ அழக்கூடாது, கவலைப்படக் கூடாது அப்படீன்னா சொல்றேன்“ என்றாள். சத்தியமாகக் கவலைப்பட மாட்டேன்டி என்றாள்.

“நீ அவங்க குழந்தை இல்லை. எவளோட ஒருத்தி யோட வாந்தின்னா, அந்த எவளோ ஒருத்தி கர்ப் பமா இருந்தப்போ அவ வாந்தி எடுத்திருப்பா, அதுக் குக் காரணம் நீ. எவளோ ஒருத்தியோட குழந்தை யான உன்னைய உன் அப்பா அம்மா எடுத்து வளத்துக்கிட்டுருக்காங்க இதுதான் அதுக்கு அர்த்தம். ஆனா இது உண்மையா? பொய்யான்னு உங்க அப்பா அம்மாதான் சொல்லணும்“ என்று கூறிவிட்டாள். ஆதிரைக்கோ தலை சுற்றியது. அப்படியே நின்ற இடத்திலேயே உட்காந்து விட்டாள். கலா பயந்து விட்டாள். “சும்மா கோவத் துல சொல்லிருப்பாங்கடி, அதெல்லாம் இருக்காது. நீ எதையும் நெனச்சுக்காதே“ என்று தேற்றினாள்.

ஆனாலும் ஆதிரையால் தன் நிலையை நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. அவள் மனம் எங்கெங்கோ சென்றது. அவள் மனதை அவளால் ஒரு நிலையில் நிறுத்த இயலவில்லை. வகுப்பில் நடத்தப்பட்ட பாடங்கள் எதுவும் ஏறவில்லை. கலாவிடம் சத்தியம் வாங்கினாள், இதை யாரிடமும் சொல்லிவிடாமலிருக்க. கலா அடிக்கடி ஆதிரையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். கலாவுக்கும் மற்றவர்களுக்கும் தெரியாமல் அழுதாள். இடைவேளையின்போது யாருக்கும் தெரியாமல் அழுதாள். மதியம் சாப்பிட கொண்டு வந்திருந்த உணவையும் சாப்பிடவில்லை. முகம் வீங்கிக் காணப்பட்டது. கல்லூரி முடிந்ததும் அவளிடம் வந்த கலா “கவலப்படாதடி, என்று ஆதிரையின் வீடுவரை சென்று அவளை வீட்டில் பத்திரமாகச் சேர்த்துவிட்டுதான் கலா தனது வீட்டிற்குச் சென்றாள்.

வீடு வந்து சேர்ந்ததும் ஆதிரையின் கவலை இன்னும் அதிகமானது. அம்மா வந்து கேட்டாள், ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய் என்று. அவள் பதில் சொல்லவில்லை. அழுதாள். அம்மாவிற்கு கோபம் தலைக்கேறியது. மறுபடியும் மறுபடியும் ஆதிரையைக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஆதிரை அம்மாவின் கோபம் அதிகமாகட்டும் அப்போது தான் உண்மையை கண்டறியமுடியும் என்று முடிவு செய்துகொண்டு அமைதியாக இருந்தாள். அவள் நினைத்தது நடந்தது. நான் உங்க பிள்ளையா இருந்தாதானே நீங்க அன்பா இருப்பீங்க என்று ஒரு வாக்கியத்தை வீசினாள். பதில் வந்து விழுந்தது. பதில் என்பதைவிட உண்மை வந்து விழுந்தது.

ஆதிரை, தான் வளர்ப்பு மகள் என்பதை அவளது வளர்ப்புத் தாய் மூலம் அறிந்து கொண்டாள். ஆதிரையின் அழுகை குறைந்தது. என்றாலும் இத்தனை வயதுவரை எந்த ஒரு துன்பமும் தெரியாமல் நம்மை வளர்த்தவர்கள் என்ற நினைப்பு அம்மா, அப்பா மேல் மிகப்பெரிய மரியாதையை அவள் தனது உள்ளத்தில் ஏற்படுத்திக் கொண் டாள். அவர்களிடம் சண்டை போடுவதும், தனக்கு வேண்டியதைக் கேட்பதும் நமது உரிமை என்று நினைத்து அடம்பிடித்து சாதித்துக் கொண்ட ஆதிரை அமைதியானாள். அதன் பிறகு அவளுக்கு அந்த வீடு தன் வீடு என்ற நினைவு போய் தாம் ஒரு அனாதை என்ற உணர்வு தொத்திக் கொண்டது.

படிப்பில் கவனம் செலுத்தினாள், அம்மா அப்பா சொல்வதைக் கேட்டு நடந்தாள். இவளது மாற்றத் தைக் கவனித்து வந்த ஆதிரையின் அப்பா, மனைவி யிடம் காரணம் கேட்டாள். அவள், தான் உண்மை யைச் சொல்லிவிட்டதாகச் சொன்னாள்.

அவர் தலையில் அடித்துக் கொண்டார். என்ன காரியம் செய்தாய். அந்தக் குழந்தையின் மனது என்ன பாடுபடும்? என்றார். அவளுக்கு திருமண வயது வந்துவிட்டது. எப்படியாவது நமது உறவினர் கள் மூலம் இந்தச் செய்தி தெரிந்துவிடு வதற்கு முன்னால் நாமே சொல்லிவிடுவது நல்லது என்று தான் இதைச் சொன்னேன். இப்போதே அவள் கணவன் வீட்டில் நடந்து கொள்ளும் விதத்தைப் புரிந்து கொள்வாள்.

போகிற இடத்தில் அவள் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்றுதான் சொன்னேன் என்றாள். இவர்கள் பேசுவது ஆதிரை யின் காதிலும் விழுந்தது. ஆதிரை உள் அறையில் இருக்கிறாள் என்ற நினைவில் பேசிக்கொண்டிருந்த அப்பா அம்மாவிற்கு அவள் மறைவில் நிற்பது தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

ஆதிரையின் கண்கள் குளமாகிப் போயின. உண்மையாகவே தன்னைப் பெற்றவர்களைவிட இவர்கள்தான் மேலானவர்கள் என்ற முடிவுக்கு வந்தவள் அறைக்குச் சென்றாள். சிறிது நேரத்தில், அவளது அறைக்குள் அப்பா நுழைந்தார். மகளை ஆதரவாக அணைத்தார். ஆதி, அம்மா உன் நல்லதுக்குத்தாம்மா அப்படிச் சொல்லியிருக்காங்க. நீ எங்களோட மகதாம்மா. நீ எதப்பத்தியும் கவலைப் படாதே என்றார்.

ஆதிரையால் அப்பாவின் முகத்தைப் பார்க்க முடியவில்லை கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடிடது. அதற்குள் அம்மாவும் அவள் அறைக்குள் வந்துவிடவே, அவர்கள் இருவரின் கால்களில் விழுந்தாள் ஆதிரை.

தாங்கள் பெற்ற மகள் தங்களை விட்டுப் போகப் போறாளே என்ற ஆற்றாமை அந்த நெருக்கமான தம்பதியரிடம் தோன்றி அவர்களை பேச்சற்று நிற்க வைத்ததுமல்லமால் அவளது கண்ணீரோடு தங்களது கண்ணீரையும் கலக்க வைத்துவிட்டது.

◆



## நீயே உலகம்!

அடி பெண்ணே! உன்னுள்
ஆற்றல்மிக சக்தியு முண்டு
பொல்லாப் பேயு முண்டு
பொருந்தாப் பேதமையு முண்டு

சக்தி உன்னை வளர்க்கும்
சுற்றத்தாரையும் வள மாக்கும்
பேய் மாற்றாரை அழிப்பதுமின்றி
பெண்ணே உன்னையு மழிக்கும்

பேதமையுள்ளவளாய் ஒருபோதும் இராதே
பேரேட்டையும் நாட்டையும் அதுகெடுக்கும்
இம்மூன்றையும் பகுத் தாராய்ந்து
இறுதியாய் சக்தியென எழு!

சக்தியின் வடிவமென செயல்படு
சாத்தானை உன்னுள் கொன்றுவிடு
சறுக்கும் அறியாமையை அகற்றிவிடு
சான்றோர் மொழிதனை மனதிலிடு.

திருமதி **ஜெயந்தி,**
அரும்பாக்கம்.

## Nov 28 – Death Anniversary of Jothirao Phooley

# MAHATMA JOTHIRAO PHOOLEY

CHIEF ARCHITECT of Constitution of India, Dr.B.R.Ambedkar had planned a biography of Mahatma Jothirao Phooley. When he gave me interviews in 1954. He said on one occasion that he intended writing a life of Mahatma Jothirao Phooley whom he hailed a one of India's gretes social reformers and regarded as one of his masters along with the Buddha and Kabir. But as his health was deteriorationg he expressed his doubts as to the work being ever completed.

Jothirao was the first Indian to start a school for the untouchables and a girl's school in Maharashtra. He wanted to remove the ignorance and superstition of the Shudras, Atishudras and Indian women and to break shackles of their slavery. So he heroically threw open the gates of knowledge to the lower classes and to Indian women. It was his aim to reconstruct the social order on the basis of social equality, justice and reason.

Jothirao's attack to Brahminism was unmistakable. The Hindusim of his day has decayed and deteriorated into Brahminism which, according to him, bred social inequality and resulted into privileges and power for and edification of the Brahmins as a class.

So Jothirao attacked the Brahmanical scriptures and puranas, revolted against priest craft and the caste system and set on foot a social movement for the liberation of the shudras, Atishudras (untouchables) and women. He was above caste. He agitated for the welfare of the Indian peasants and labour and it should be noted at the Indian Labour Movement is and offshoot of his social movement . His sympathies were broader and were not confined to the Labour classes. He started girl's school for the benefit of all classes, Championed the cause of widow remarriage, conducted and orphanage and praised the work of those Brahmins who stood for social justice and reason.

In Short, Jothirao stood for the dignity of man, religious toleration and human rights. He regarded all Indians as equal and free and declared that one law should be applicable to man and woman.

Since Pandit Jawharlal Nehru's Discovery of India, attempts have been made by scholars to rediscover India, her past, her ideals and her soul. So in that sprit of inquiry it would be proper to study Mahatma Phooley, the prophet of the common man, whom veer savarkar described as a social revolytionary.

Jothirao's life is thus an inspiration to those who really aim at achieving emotional integration and at giving a human, social and economic content to the Swaraj of India.

**-DHANANJAY KEER (Thanks toVoice of OBCs)**

*Josua.*

# இடஒதுக்கீடு எங்கே?



இந்தியாவின் சார்பாக கிரிக்கெட் விளையாட தமிழகத்திலிருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள்.

**1. ஸ்ரீகாந்த் - பிராமணர்**

**2. ரவீந்திர அஷ்வின் - பிராமணர்**

**3. சடகோபன் ரமேஷ் - பிராமணர்**

**4.** WV **இராமன் - பிராமணர்**

**5. சிவராம கிருஷ்ணன் - பிராமணர்**

**6. ஹேமங் பதானி - பிராமணர்**

**7. லக்ஷ்மிபதி பாலாஜி - பிராமணர்**

**8. பத்ரிநாத் - பிராமணர்**

**9. முரளி கார்த்திக் - பிராமணர்**

**10. தினேஷ் கார்த்திக் - பிராமணர்**

**11. அபினவ் முகுந்த் - பிராமணர்**

**12. முரளி விஜய் - பிராமணர்**

**13. அனிருத் ஸ்ரீகாந்த் - பிராமணர்**

பிராமணர்களால் மட்டும்தான் கிரிக்கெட் விளையாட முடியுமா? பதினொரு தமிழக மீனவர்களை களத்தில் இந்தியாவுககாக இறக்கிப் பாருங்கள் அப்போது தெரியும் யார் நல்ல வீரர்கள் என்று. சாதனைகள் எல்லா இந்தியா வசமாகிவிடும். ஒரு சாதிக்கே விளையாட்டில் உரிமை என்பது ஜனநாயக நாட்டில் மிகப்பெரிய ஏமாற்று வேலை..

# தமிழிசை மும்மூர்த்திகள் யார்?

யாழ்மொழி

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தியாகய்யர் சமாதியில் ஒவ்வொரு ஆண்டும் சனவரி மாதத்தில் தியாகப் பிரம்மோற்சவம் நடைபெறு கிறது. தஞ்சாவூர் மாவட்டம் திருவாரூரில் பிறந்த தெலுங்கு சமற்கிருத சங்கீத மும்மூர்த்திகளான மறைந்த தியாகய்யர், முத்துச்சாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி இவர்களின் விழாக்களாகக் கொண்டாடப் பட்டு வருகின்றது.

ஆனால் அதே தஞ்சை மாவட்டம், சீர்காழியில் பிறந்த முத்துத் தாண்டவர், மார்முத்தாப் பிள்ளை, அருணாசல கவிராயர் ஆகிய தமிழிசை மும்மூர்த்தி களின் விழாக்கள் ஏன் கொண்டாடப் படவில்லை. சற்றெறக் குறைய நூற்று என்பது ஆண்டுகளுக்கு முன்பே தமிழிசை அறிஞர்களாக இருந்தவர்களின் தமிழிசை ஏன் புறக்கணிக்கப்படுகிறது. என்ற உள்ளர்த்தம் புரியவில்லை.

இந்தத் தமிழ் மும்மூர்த்திகளின் காலம், மாரிமுத் தாப்பிள்ளை 1717 1787, அருணாச்சலகவிராயர் காலம் 1712 1779 முத்துத் தாண்டவர் காலம் 1805 1879 ஆகும். அருணாச்சல கவிராயர் 470 பாடல் களும், முத்துத்தாண்டவர் 54 பாடல்களும், மாரி முத்தாண்டப்பிள்ளை 30 பாடல்களும் இயற்றியுள் ளனர்.

தமிழ் மண்ணில் பிறந்து தமிழிசைக்காக வாழ்ந்த இவர்களின் தமிழிசைப் பாடல்கலை தஞ்சை தமிழ்மண்ணில் தமிழிசை விழாக்களாக கொண் டாட தமிழ்ப் பற்றும், தமிழினப்பற்றும் கொண்ட தமிழ்வல்லுநர்களும், தமிழ்த் தேசியர்களும் முன்வர வேண்டும்.

இதனை தமிழக அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல முயற்சிகள் மேற்கொள்ள முன் வர வேண்டும். தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக் கழகம், கரந்தை தமிழ்ச்சங்கம் இருக்கிறது. திருவையாறு தமிழிசைக் கல்லூரியும் இருக்கிறது. ஆனால் மறைந்த தமிழிசை மும்மூர்த்திகளின் தமிழிசையை கண்டறியாமல் இருப்பதென் காரணம் அறிந்து அதற்கான ஆய்வுகளில் இறங்கி தமிழிசை மும் மூர்த்திகள் ஆற்றிய இசைப்பணியை இளைய தலை முறையினருக்கு எடுத்துச்செல்ல வேண்டும். ◆

# முல்லை நீதான்!

பாவலர் சீனி.சுந்தரமூர்த்தி
எம்.ஏ., எம்.ஏ., எம்.எட்.,



உன் மாமன் மாமிதான் எண்ணி வாழ்த்த
உறவினர்கள் குணக்குன்றே! உன்னைப் போற்ற
தன் பிணையை நினையாமல் பிறரை என்றும்
தன் நிழலில் வாழவைத்தாய்! கற்பின் செல்வி
ஒன்றேநம் இரண்டுள்ளம் இணைந்தே வாழ
உலகினிலே பிரிக்கஇங்கு யாரும் இல்லை!
என்றுரைத்தாய்! முக்கனியே! இதனை யெல்லாம்
ஏன் மறந்தாய்! என்னெஞ்சே! முல்லை நீதான்!

யான் மறக்கச் செய்திட்டாய்! நினைவும் உன்னை
யாரென்றே கேட்க வைத்தாய்! மேலும் இன்று
கோன்மறந்த குடியேபோல் ஆக்கி விட்டாய்!
கொஞ்சிநின்ற காலமெலாம் மறந்தே போனாய்!
ஏன் என்னை இப்படிநீ வதைக்கத் தானோ?
எப்படித்தான் உள்ளத்தில் உறுதி கொண்டாய்!
ஊனமிகு கண்களுக்கு நீயும் இங்கே!
உறைந்திடாமல் புதைத்திட்டாய்! முல்லை நீதான்!

எங்கிருந்தும் வாழ்த்துரைக்க, என்றன் நெஞ்சம்
எப்பொழுதும் தயங்காது இன்றோ! உன்றன்
திங்கள் முகம் காணாமல் கொஞ்ச நேரம்
திக்கெல்லாம் தேடுகின்ற நிலையு மேனோ?
மங்கைநாண் பொட்டோடே “மங்கல மங்கை”
மனமுருக இறந்திட்டாய்! என்னை விட்டே
எங்கோ! நீ! சென்றிட்டாய்! இன்னல் சூழ
என்செய்வேன்! என்னன்பே! முல்லை நீதான்!

ஆவலுடன் தேடிஉ(ன்)னைப் பார்க்கும் போதே
அணிந்திட்ட பட்டுடைதான் விழித்தே என்னை
ஆவலுடன் பார்க்குதம்மா! மீண்டும் வந்தே
அணிவாயோ! தண்ணிலவே! துள்ளும் மானே!
கூவுகின்ற குயிலிசையோ! உன்றன் பேச்சும்
குலங்காக்க வந்தனையோ! என்றே ஓர்ந்தேன்!
தாவுகின்ற அணில்கொறித்த கனியை மெல்ல!
தங்கம்நீ! எடுத்தளித்தாய்! முல்லை நீதான்!

பைந்தமிழே! சிட்டே! தான் என்றே சொல்ல
பைந்தளிராம் மார்பினிலே சாய்ந்தே நின்றாய்!
இந்தஇடம் மீண்டும்வந்து பார்க்கும் போதே
இன்னலதும் மீறுதம்மா! அன்பின் தெய்வம்
அன்னையெனக் காத்திடுவாய்! எனநி னைத்தேன்
அலைந்திடவே! வைத்திட்டாய்! எங்கே சென்றாய்!
என்னேடி! இப்படியா செய்வாய் நீயும்
என்னுயிரே! கண்மறைந்தாய்! முல்லை நீதான்!

தோப்பிருக்க வளமில்லை கண்ணே! அன்பின்
துணையேநீ பிரிந்திட்டாய்! வருவேன் நானும்
காப்பில்லா புயற்காற்றால் கப்பல் மூழ்கக்
கானவரின் வலையினிலே பறவை சிக்கக்
கூப்பிட்ட குரல்கேட்க அத்தா னென்றே
குரல்கொடுக்க இன்றில்லை! நீயுந் தானே!
பூப்பறித்தேன் வெந்தணலில் போட்டே விட்டேன்!
புழுங்குகின்றேன்! தந்துவிட்டாய்! "வாழ்வின் கண்ணீர்.



# சென்னையில் உள்ள இசைக்கல்லூரிகள் முறைப்படி இயங்குகின்றனவா?




சென்னையில் அரசு இசைக்கல்லூரிகளும்ட அரசின் அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளும் தங்களுக் கான சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்கிறதா என்றால், இல்லை என்றே பெரும்பாலானவர்கள் கூறுகிறார்கள்.

சென்னைப் பல்கலைக்கழகம், ராணி மேரி கல்லூரி, அடையாறில் இயங்கி வரும் இசைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கல்லூரி தமிழிசைக் கல்லூரி ஆகியவற்றில் இசைத்துறையில் ஆசிரியர் களாகப் பணியாற்றுபவர்களின் உரிய கல்வித் தகுதி யோடு இருக்கிறார்களா? என்றால் பலர் அவ்வாறு இல்லை என்று சொல்லப்படுகிறது. டிப்ளமோ படித்தவர்கள் பட்டப்படிப்பு படிப்பவர் களுக்கு பாடம் நடத்துகிறார்கள் என்ற வேதனை யான நிகழ்வுகளும் நடந்து கொண்டிருக்கின்றன என்கி றார்கள் இசை படிக்கும் மாணவர்கள்.

ஆசிரியர் பணி நியமனத்தில் பாரபட்சம் காணப்படுவதாகவும் ஒருசாராரே எல்லாப் பதவிகளையும் பிடித்துக் கொண்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

பணி நியமனத்தில் இடஒதுக்கீடு பின்பற்றப்பட வில்லை என்றும் சொல்லப்படுகிறது. தகுதியான வர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற குற்றச் சாட்டும் நிலவுகிறது. இசைத்துறையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்று நினைத்த வரும் மாணவர் கள் இங்கு நடக்கும் அலங்கோலங்களைக் கண்டு மனம் வெதும்பி நிற்கிறார்கள்.

◆ **இமயவரம்பன்**

---

# தொலைந்த அலைபேசியைக் கண்டுபிடிக்க...



1. உங்கள் செல்போனிலிருந்துக்கு ***#06#** டயல் செய்யவும்.

2. உங்க மொபைல்ல ஒரு 15 டிஜிட் நம்பர் வரும்.

3. இதுதான் உங்க போனின் **IMEI NO** அதனை உடனே பத்திரமா நோட் பண்ணி வைத்துக்கொள்ள வேண்டும்.

4. செல்போன் தொலைஞ்சு போச்சுன்னா உடனே இந்த நம்பரை **mailto:cop@vsnl.net** க்கு மெயில் பண்ணவேண்டும்.

5. போலீஸூக்கெல்லாம் போக வேண்டாம்.

6. உங்க மொபைல் போனை 24மணி நேரத்தில் **GPRS** மற்றும் **Internet** மூலம் கண்டுபிடித்து விடுவார்கள்.

7. உங்க மொபைல் போன் நம்பரை மாத்தினால் கூட போன் எங்கிருந்து ஒர்க் ஆகுதுன்னு எளிதாகத் தெரிந்து கொள்ளலாம். **ஜூட்**.




1. GOOGLE – Global organization of oriented group language of earth.
2. YAHOO - Yet Another Hierarchical Officious Oracle,
3. WINDOW – Wide Interactive Network Development for office work solution
4. Computer – Common oriented machine particularly united and used under technical and educational research.



5. Virus – Vital information resources under siege
6. UMTS – Universal monile telecommunications system
7. Arroled – Active – matrix organic light – emitting diode.
8. Oled – Organic light emitting diode.
9. IMEI – International Mobile Equipment Identity.



10. ESN – Electronic serial number
11. UPS – Uninterruptible power supply
12. HDMI – High definition multimedia interface.
13. VPN – Virtual private network
14. APN – Access point name

15. SIM – Subscriber identity module
16. Led – light emitting diode
17. DLNS – Digital living Network Alliance
18. RAM – Random access memory
19. ROM – Read only memory
20. VGA – Video Graphics Array
21. QVGA – Quarter video graphics array
22. WVGA – Wide video graphics array
23. WVGA – Wide screen extended graphics array
24. USB – Universal serial bus.
25. WKAN – Winkers local area network
26. Ppl – Pixels per inch
27. Lcd – liquid crystal display
28. HSDPA – High speed down- line packet access.
29. HSUPA –high speed uplink packet access
30. HSPA – high speed packet access
31. GPRS – General packet radio service
32. EDGE – enhanced data rates for global evolution
33. NFC – Near field communication
34. OTG – On-the-go
35. S-Lcd- Super liquid crystal display
36. O.s – Operating system
37. Sns – Social network service
38. H.s – Hotspot
39. P.O.I – Point of interest
40. GPS – Global positioning system
41. DTP – Desktop publishing
42. DNSE – Digital national sound engine
43. DVD – Digital video disk
44. OVI – Ohio video intranet
45. CDMA – Code Division MUultiple Access
46. WODMA – Wide – band code division multiple access
47. GSM – Global system for mobile communications
48. W1-71 – Wireless fidelity
49. DIVX – Digital Internet video access.
50. APK – Autheticated public key
51. J2ME – Java 2 micro edition
52. SIS - Installation source
53. Dell – Digital electronic link library
54. Acer – Acquisition collaboration experimentation reflection.
55. RSS – Really simple syndication
56. TFT – Thin film transistor
57. AMR – Adaptive Multi Rate
58. MPEG – Moving pictures
59. CVRS – Interactive voice response system
60. HP – Heklect packand.

# பிரதமர் மோடி மீது முலாயம் சிங் பரபரப்பு புகார்

● வேர்மகள்

"எனது திட்டங்களை காப்பி அடிக்கிறார்"

லக்னோ, நவ.24 எனது திட்டங்களை பிரதமர் மோடி காப்பி" அடிக்கிறார் என்று பிரதமர் மோடி காப்பி" அடிக்கிறார் என்று பிரதமர் மோடி மீது முலாயம் சிங் பரபரப்பு புகார் கூறினார்.

**காப்பி அடிக்கிறார்:**

உத்தரபிரதேச மாநிலம், லக்னோவில் 302 கி.மீ. நீளலக்னோ ஆக்ரா நெடுஞ்சாலை திட்ட அடிக்கல் நாட்டு விழாவில் சமாஜ்வாடி கட்சி தலைவர் முலாயம் சிங் யாதவ் பிரதமர் நரேந்திர மோடியை சாடினார். கிராமங்களை தத்து எடுத்தல், கழிவறை கட்டுதல் உள்ளிட்ட தனது திட்டங்களை அவர் காப்பி அடிப்பதாக குற்றம் சாட்டினார். இதுபற்றி அவர் கூறியதாவது:

கிராமங்களை தத்து எடுப்பது குறித்து அவர் (பிரதமர் மோடி) பேசுகிறார். நான் 1990ம் ஆண்டிலேயே, கிராமங்களை தத்து எடுத்து இருக்கிறேன். பிரதமர் என்னை காப்பி அடித்துக் கொண்டிருக்கிறார். கழிவறைகள் கட்டுவதை 1990ம் ஆண்டில் தொடங்கி விட்டேன். இவை எல்லாவற்றையும் நான் செய்திருக்கிறேன். எனது தூய்மை திட்டத்தைத்தான் மத்திய அரசு பின்பற்றி வருகிறது.



**வறுமையை ஒழியுங்கள்**

*அழுக்கை அகற்றுவது பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். முதலில் நீங்கள் வறுமையை ஒழியுங்கள். வறுமையை ஒழித்தாலே அழுக்குகள் அகன்று விடும்.*

*நான் ஏற்கெனவே செய்ததைத்தான் அவர் இப்போது பேசிக்கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் (பொது மக்கள்) கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டும்.*

**உ.பி.அரசுக்கு சூடு**

*எனது பிறந்த நாள் செலவுக்காக நிதி எங்கிருந்து வந்தது என்று கேள்வி எழுப்புகிறார்கள். அரசின் பணம் அதற்காக செலவு செய்யப்படவில்லை. இது பற்றி எழுதுகிறவர்கள் ஒன்றும் அறியாதவர்கள். அரசின் பணம் ராம்பூரில் செலவு செய்யப்பட வில்லை (முலாயம் சிங்கின் 75வது பிறந்தநாள், ராம் பூரில் 75அடி நீள கேக் வெட்டி கொண்டாடப் பட்டது நினைவுகூரத்தக்கது).*

*உத்தரபிரதேசத்தில் வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றுவதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து அடிக்கல் நாட்டு விழா பற்றிதான் நான் கேள்விப்படவில்லை. நிறைவேற்ற நிறைய திட்டங்கள் உள்ளன. நான் அவற்றை தொடங்கி வைக்க இன்னும் வாய்ப்பு கிடைக்கவில்லை.*

*இவ்வாறு முலாயம் சிங் கூறினார்.*

**மோடிக்கு பாராட்டு**

*அதே நேரத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டுக்கொள்கையை அவர் பாராட்ட தவறில்லை.*

*இது பற்றி அவர் குறிப்பிடும் போது, "பெரிய நாடுகளுடன் இந்தியா நல்ல நட்புறவை கொண்டிருக்க வேண்டும். அந்த விஷயத்தில் மோடி சரியானதை செய்து கொண்டிருக்கிறார்" என்றார்.*

*இருப்பினும் மோடியின் வெளிநாட்டு பயணங் கள் குறித்தும். அதனால் ஏற்பட்ட பலன்கள் குறித்தும் பாராளுமன்றத்தில் தான் கேள்வி எழுப்பப்போவதாக தான் கேள்வி எழுப்பப் போவதாக அவர் குறிப்பிட்டார்.* ◆

## தெரிந்து கொள்க!

ஆங்கிலம் படித்தால் அறிவு குறையும்!

திறமை குறையும்! ஆற்றல் குறையும்!

அடிமைத்தனம் பெருகும்! பேடித்தனம் பெருகும்!

*– திரு. வி. க.*

தமிழ் படித்தால் அறம் பெருகும்! தமிழ் படித்தால் திறமை பெருகும்,

தமிழ் படித்தால் நெஞ்சில் உரம் பெருகும்.

தமிழ் படித்தால் வீரம் வரும்.

*– பெருஞ்சித்திரனார்.*

**திருவள்ளுவர் – வேறுபெயர்கள்**

நாயனார், முதற்பாவலர், தெய்வப்புலவர், தேவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர்,

**திருக்குறள் – வேறு பெயர்கள்**

முப்பால், உத்தரவேதம், பொதுமறை, பொய்யா மொழி, திருவள்ளுவம், வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, தெய்வநூல்


**பதினாறு வகைப்பேறுகள்**

1. புகழ், 2. கல்வி, 3. வலிமை, 4. வெற்றி, 5. நன்மக்கள், 6. பொன், 7. நெல், 8. நல்லூழ், 9. நுகர்ச்சி, 10. அறிவு, 11. அழகு, 12. பெருமை, 13. இளமை, 14. துணிவு, 15. நோயின்மை, 16. வாழ்நாள்.

**தொல்காப்பியர் வாழ்ந்த காலம் கி.மு.735.**

தமிழின் இருகண்களில் ஒன்று தொல்காப்பியம். மற்றொன்று திருக்குறள்.

உலக மொழிகளுக்கெல்லாம் இலக்கணம் வகுத்தது தொல்காப்பியம். பாணிக்கு முந்தியது. உலகமொழிகளில் இல்லாத பொருள் இலக்கணம் தொல்காப்பியத்தில் மட்டுமே உள்ளது.




# உண்மையைத் தேடி

கார்த்திகேயன் தான் விசாரித்த முறைபற்றி ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டுள்ளார். அதில் உண்மைக்கு மாறாக பல கருத்துகளும் சந்தேகங் களுக்கு இடமளிக்கும் பல நிகழ்வுகளும் இடம் பெற்று உள்ளன.

மறைந்த போட்டோ கிராபர் அரிபாபு விடுத லைப்புலியின் ஆதரவாளர் என சித்தரிக்கப்பட்டு உள்ளார். எப்படி எனில் ஏழ்மைப் பிடியில் வாழ்ந்த அரிபாபு இறந்த உடன் அவருடைய தாய் தந்தையர் அவர்கள் வீட்டில் இருந்த அனைத்து ஆவணங் களையும் (விடுதலைப்புலிகள் பற்றிய) அவருடைய சகோதரி வீட்டிற்கு அனுப்பி விட்டதாக கூறுகின்ற னர். அப்படி என்றால் போதுமான அறிவு விடுத லைப் புலிகளைப் பற்றி அவர்களுக்கு இருந்து இருக்கின்றது. அதனால் அவர்கள் ஆவணத்தை மறைத்து உள்ளனர். ஆதலால் ஆதாரத்தை மறைத்த குற்றத்திற்காக அவர்கள் கைது செய்யப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் கைது செய்யவில்லை ஏன்என்று தெரியவில்லை? ஒருவேளை கைது செய்து இருந்தால், அவர்களைச் சுற்றி உள்ள அவர்களது உறவினர்கள் போராடி இருப்பார்கள். இது விசாரணை அதிகாரிகளுக்கு தர்ம சங்கடமாக அமைந்திருக்கும். இதனால்தான் ரகோத்தமன் தன் புத்தகத்தில் எழுதும் போது அரிபாபுவின் வீட்டை பலமுறை நோட்டம் விடும்படி தனக்குக் கீழ் உள்ள அதிகாரிகளுக்கு கட்டளை இட்டேன் என்று கூறியுள்ளார். அப்படி எனில் அவரது தாய்தந்தையர் ஒருவேளை பணம் இல்லாமல் இருந்து இருக்கலாம். ஆனால், அங்குள்ள மக்களின் பலத்தோடு அந்த இடத்தில் இருந்து இருக்கலாம். அதனால் அவர் களைக் கைது செய்யாமல் விட்டு விட்டனர் என்பது தெளிவாகிறது.

மேலும் அன்றைய பத்திரிகையில், அதிகாலை யில் ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து சைதாப் பேட்டைக்கு வந்திறங்கிய அந்த மர்ம மனிதர் யார்? என்று பெரிய அளவில் கேள்விகள் எழுப்பப் பட்டன. அந்த மர்மனிதனை புலனாய்வு அதிகாரி கள் கடைசி வரை கண்டு பிடிக்கவில்லை. அந்த மனிதன் அரிபாபுவை தொடர்பு கொண்டு

6 • இராஜாசிங்

போட்டோ எடுக்க அழைத்து சென்றாரா என்று விசாரிக்காமல், விடுதலைப்புலிகளின் ஆதரவு என்று அவர்களுடன் தொடர்புப்படுத்தி விசாரணை அதிகாரிகள் கதையை உருவாக்கி எடுத்து இயம்பு கின்றனர். இப்படி நீதிமன்றத்தை நாட்டின் தலைமைப் பொறுப்பில் உள்ள அதிகாரிகள், மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சிப் போட்டு ஏமாற்றி உள்ளனர் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது.

இந்த நிகழ்வு நேற்று மட்டும் தமிழகத்தில், தமிழனுக்கு நடக்கவில்லை. இன்றும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. எப்படி எனில் மூன்று ஆண்டுகளுக்கு முன் ஐந்து மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் கைது செய்யப்பட்டனர். பின்னர் இலங்கை கடல்படையால் அவர்கள் கஞ்சா கடத்திவந்தனர் என பொய்க் குற்றச்சாட்டு வைக்கப்பட்டு இலங்கை நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டனர் என்பது நம் அனை வருக்கும் தெரிந்ததே. பின்பு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை அதிபரிடம் பேசி மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு எவ்வளவு கேவலமான செயல் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 14/11/14 அன்று அரிகரன், தந்தி டிவி ஆயுத எழுத்து நிகழ்வில் இலங்கை அமைச்சர் தொண்டை மானிடம் பேசும் போது உங்களது நேவி இந்தியக் கடல் எல்லையில் உங்கள் மீனவர்களைப் பிடித்து உள்ளனர். அந்த விசைப்படகில் ஜி பி ஆர் எஸ் கருவி இருந்திருக் கின்றது. அந்த ஜி பி ஆர் எஸ் கருவி இந்திய எல்லைக்குள் இருந்ததைக் காட்டுகின்றது என்று கூறினார்.

1. ஜி பி ஆர் எஸ் கருவி பொய் சொல்லாது. மீனவர்கள் இந்திய எல்லைக்குள்ளே பிடிக்கப் பட்டுள்ளனர் என்பதை ஜி பி ஆர் எஸ் கருவி மூலம் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

2. இவர்கள் கஞ்சா கடத்தவில்லை என்று இந்திய உளவுத்துறையினர் கூறுகின்றனர். இலங்கை அரசு மீனவர்களுக்கு மரண தண்டனை விதித்ததின் மூலம், இந்திய உளவுத்துறை, செயல் இழந்த துறையாக மாறி, பொய் சொல்வதாக இலங்கை அரசு விளம்பரப்படுத்தி உள்ளது. இவ்வாறு இந்திய அதிகாரிகளின் கவுரவத்தையும் மரியாதையையும் சீர் குலைக்கும் நம் அண்டை நாடு எப்படி நமக்கு நெருங்கிய நட்பு நாடாக இருக்க முடியும்?.

இந்திய நாடு, இலங்கையில் உள்ள இந்தியத் தூதரை அழைத்து ஏன் இலங்கை கடற்படை இந்திய எல்லைக்குள்ளே வந்து இந்திய மீனவர் களைக் கைது செய்தது என்று ஜி பி ஆர் எஸ் கருவியின் ஆதாரத்தை விளக்கிக் காட்டி அவர் களை அன்றோ அல்லது அதற்குப் பிறகோ அவர் களைக் கண்டித்து இருந்தால் இலங்கை நீதிமன்றம் இந்தத் தீர்ப்பைக் கூறி இருக்க முடியுமா?

இலங்கையில் உள்ள இந்தியத் தூதர் மற்றும் அதிகாரிகளின் மெத்தனப்போக்கு வெட்ட வெளிச் சத்துக்கு வந்த உள்ளது. நம்நாட்டில் தவறு செய்த இத்தாலிய காவலர்களுக்கு இங்கு உள்ள அவர் களது தூதரகமும் இத்தாலி நாடும் எப்படி எல்லாம் உதவின என்று நாம் பார்த்தோம். இப்படி இருக்க இந்தியாவில் இருந்து இலங்கை சென்ற இந்தியத் தூதரக அதிகாரிகள் அங்கு என்ன செய்து கொண்டி ருந்தனர். இலங்கையில் உள்ள இந்தியத் தூதரும் இந்திய அதிகாரிகளும், இலங்கை நீதிமன்றத்தில் அந்த ஐந்து அப்பாவித் தமிழர்கள் இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்த ஆதாரதையும் கஞ்சா கடத்தவில்லை என்ற உறுதியான உளவுத்துறையின் அறிக்கையையும் அங்குள்ள நீதிமன்றத்தில் எடுத்துக் கூறாமல் மௌனம் காத்து அவர்களை விடுவிக் காமல் இருந்ததன் மருமம் என்ன? செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவறிய அவர்கள் தண்டிக்கப் படாமல் விடப்பட்டது ஏன்?

ஒரு காவல்துறை அதிகாரி தவறு செய்தால் தண்டிக்கப்படுகிறார். ஒரு வாகன ஓட்டி தவறு இழைத்தால் தண்டிக்கப்படுகிறார். ஆனால் இந்திய நாட்டின் பெருமையை காப்பதற்கும், இந்தியர்கள் சரியாக நடத்தப்பட வேண்டும் என்பதற்காகவும், இந்தியர்களுக்கு எந்தவிதத் துன்பமும் வந்துவிடக் கூடாது என்பதற்காகவும் ஏற்படுத்துப் பட்ட தூதரக நிர்வாகம் இந்த விசயத்தில செயலிழந்து போனதின் மருமம்தான் என்னவோ? செயலிழந்த அவர்களுக்கு தண்டனை தருவதுதானே முறையாகும். குறைந்த பட்சம் மாற்றப்படுவார்களா? அல்லது தமிழர்களை வஞ்சித்ததற்காக பாராட்டப்படுவார்களா? இது தமிழர்களை ஒடுக்குவதற்கான முறையோ தெரிய வில்லை.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் இந்திய எல்லைக்குள் பிடிக்கப்பட்டார்கள். இந்திய உளவுத்துறை, மீன்பிடிக்கத்தான் இந்திய மீனவர்கள் சென்றார்கள். அவர்கள் கஞ்சா கடத்தவில்லை என தெளிவாகக்கூறிய பின்னரும் இந்தியத் தூதரக அதிகாரிகள் மெத்தனமாக இருந்துவிட்டு அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்ட பின்னர் இந்திய தலைமை அமைச்சர் மோடி அவர்கள் இலங்கை அதிபருடன் பேசி, இவர்கள் நீதிமன்றத்தில் நாங்கள் குற்றமற்றவர்கள் என நிரூபிப்பதற்கான வழக்கை வாபஸ் வாங்கச் செய்து, இனிமேல் நாங்கள் கஞ்சா கடத்த மாட்டோம், எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள் என்று எழுதிக் கொடுத்து விட்டு, செய்யாத குற்றத்தை, செய்தது போல ஒரு நிகழ்வை உருவாக்கி தமிழனை ஏமாற்றிய செயல் ஒரு நாடகம் தானே.

இன்று ஐந்துபேர், நாளை ஐம்பது பேர், நாளை மறுதினம் 500 பேர் என்று தொடர்ந்தால் அப்போதும் இந்திய அரசு இதே நிலையைத் தான் எடுக்குமா? மேலும் சுப்பிரமணியசாமி இலங்கைக் குச் சென்று ராசபக்சேவுடம் பேசுகிறார். அவர் சொன்னவுடன் மீனவர்கள் விடுவிக்கப்படுகிறார் கள். அவர் கூறியவுடன் விசைப்படகுகள் அனைத்தும் பிடித்து வைக்கப்படுகின்றன. அப்பாவி ஏழை மீனவர்கள் அவரைப் பார்த்த உடன் விசைப் படகுகள் அனைத்தும் சில நாட்களில் விடுவிக்கப் படும் என்று சில தலைவைர்கள், தலைவிகள் கூறுகின்றனர். அப்படி என்றால் சுப்ரமணிய சாமிக்கு இலங்கையில் என்ன செல்வாக்கு உள்ளது. ஜெயின் கமிசன் கூறுவது போல் சுப்ரமணிய சாமியை விசாரித்தால் உண்மைக் குற்றவாளிகள் வெளிஉலகத்திற்குத் தெரிய வருவார்கள் அல்லவா?.

வழக்கறிஞர் மதிப்பிற்குரிய செ. துரைசாமி அவர்கள் ராசீவ் காந்தி கொலை மர்மங்களும் மறைக்கப்பட்ட உண்மைகளும் என்ற ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதில் ஓர் உண்மையை ஜெயின் கமிசனுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், எனக்குத் தெரிந்த ஒரு சில உண்மைகளை உங்களுக்குக் கூற விரும்புகிறேன் எனவே அது உங்களது விசாரணைக்கு உதவியாக இருக்கும். ஒரு புதிய திருப்பத்தையும் விடுதலைப்புலிகளால் செய்யப்பட்டதாக கூறப்படும் இந்தக் கொலை வழக்கில் மறைக்கப்பட்ட உண்மையும் வெளிவரும் என்று கூறியதாக எழுதப்பட்டிருக்கிறது.

1994 மே 29ஆம் தேதியன்று நானும் பிரதமரின் அரசியல் பிரிவுச் செயலாளர் ஜிதேந்திரப் பிரசாத் மற்றும் பத்திரிகையாளர் ராஜிவ்சுக்லா ஆகியோர் கர்நாடகா ஆளுனர் மாளிகையில் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருந்த போது அங்கு தற்செயலாக வந்த முன்னாள் அமைச்சர் சுப்ரமணியசாமி, பிரபாகரன் தானாக இச்செயலைச் செய்திருக்க மாட்டார். அவருக்கு பணத்தேவை அதிகமாக இருந்தது. பணத்திற்காக இதைச் செய்திருப்பார். என்று கூறியிருக்கிறார். அதோடு சந்திரசேகர் அரசு ஆட்சியில் இருந்தபோது உளவுத்துறைக்குக் கிடைத்த ரகசியத் தகவல்படி ராசீவ் காந்தியைக் கொல்ல ரகசியத் திட்டம் இருந்தது தெரிய வந்தது. ஆனால் அதை அரசாங்கத்திடம் கூறவில்லை. சாமி மேலும் கூறுகையில், அந்தச் சதியின் பின்னணியில் இருந்தது யார் என்பதைக் கண்டு பிடிக்க முடிய வில்லை. ஆனால் பலகோடி ரூபாய் பணம் அந்தக் காரியத்திற்காக பரிமாற்றம் செய்யப்பட் டுள்ளது என்று கூறியிருக்கிறார். அதுமட்டுமல் லாது, தான் உளவுத்துறை, ரா அமைப்புக் கூட்டங்களிலும் கலந்து கொண்டதாகவும், அப்போது தான் தனக்கு அந்தத் தகவல் கிடைத்ததா கவும் கூறியிருக்கிறார். மற்றொரு செய்தியையும் அவர் கூறியிருக்கிறார். அமெரிக்க தூதரகத்தின் முதன்மைச் செயலாளர் ராசீவ் காந்திக்கு எதிரானவர், அவர் அன்றைய அரசுடன் நெருங்கிய தொடர்பு வைத்து இருந்தார், என்று கூறி இதன் அடிப்படையில் விசாரணை செய்யுங்கள் என்று கமிஷனுக்கு தெரியப்படுத்தி யிருக்கிறார்.

விடுதலைப்புலி தலைவர் பிரபாகரனுக்கு பணத்தேவை இருந்தது என்று சுப்பிரமணியசாமிக்கு எப்படித் தெரிந்தது? அப்படி என்றால் விடுதலைப் புலிகளுக்கும் சாமிக்கும் உள்ள தொடர்பு என்ன? இராசீவ் காந்தி கொலைக்கு முன்னால் இலங்கைத் தமிழர்களை (விடுதலைக்காகப் போராடும் இளை ஞர்களை) தரம் தாழ்த்திப் பேசி, பின் தமிழகத்தில் உள்ள அரசியல்வாதிகளின் கண்டனத்தால் அதற்கு மன்னிப்பு கேட்டார். இந்த நிகழ்வை நாம் சற்று ஆழமாக யோசித்துப் பார்த்தோமானால், சாமி விடுதலைப்புலிகளைச் சந்தித்து ராஜிவ்காந்தியை கொலை செய்யும்படி கேட்டு இருக்கலாம். ஆனால் அதற்கு விடுதலைப்புலிகள் இச்செயல் தர்மம்

ஆகாது என்று அதற்கு உடன்படாமல் மறுத்திருக் கலாம். அதனால் விரக்தி அடைந்த சுப்ரமணியசாமி இலங்கைத் தமிழர்களை (விடுதலைப்புலிகளை) தரம் தாழ்த்தி பேசி இருப்பார் என்று நாம் யூகிக் கலாம் அல்லவா. மேலும் பல நூறு கோடி பணம் புரண்டது என்றால், எங்கு, எப்படிப் புரண்டது என்று இவருக்குத் தெரிந்திருக்கும்தானே அப்படி இருக்க, அனாதைகள், திக்கற்றோர், ஏழைகள் எப்படி இராசீவைக் கொன்று இருக்க முடியும்?

விடுதலைப்புலிகள் சாமியின் வேலைக்கு செவிசாய்க்காததால் அவர் இலங்கை அரசுக்கு, விடுதலைக்காகப் போராடும் இளைஞர்களை ஒழிப்பதற்கான சூழ்ச்சியை வஞ்சனை மிக்க ஆலோசனையைத் தெரிவித்து, அந்த அரசின் முழு ஒத்துழைப்புடனும், அன்றைய இந்திய அரசின் மறைமுக ஒத்துழைப்புடனும் ராசீவ் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்பது பாமரனும் சந்தே கப்படக் கூடியதுதான்.

இலங்கைக்கும் சு.சாமிக்கும் உள்ள நெருங்கிய தொடர்பால் ராசபக்சே, சூழ்ச்சி யும் வஞ்சனையும் மிக்க ஒரு ஆலோசகர் தமக்கு கிடைத்துவிட்டார் என்ற நம்பிக்கையில் சாமி சொல்வதையெல்லாம் கேட்டு நடந்து கொண்டிருக் கிறார். எடுத்துக்காட்டு 5 மீனவர்கள் தண்டனை, விடுதலை நாடகம்.

ராசீவை விடுதலைப்புலிகள் கொலைசெய்ய வில்லை என்பதற்கான ஒரு முக்கியச் சாட்சி விடு தலைப்புலிகளின் இரண்டாம் கட்டத் தலைவர் டிக்சன் கைது செய்யப்பட்டு பின்னர் விசாரணை அதிகாரிகளால் விடுதலை செய்யப்பட்டது. கொலை செய்தது விடுதலைப்புலிகள்தான் என்றால் டிக்சனை எப்படி விடுதலை செய்திருப்பார்கள். மேலும் டிக்சன் வெளிநாடுகளுடன் தொடர்புடையவர். அவர் கைது செய்யப்பட்டு குற்றம் சுமத்தப்பட்டு இருந்தால், உலகநாடுகள் விசாரணை அதிகாரி களையும் அந்தக் குழுவையும் வேறு விதமாகப் பார்க்க நேர்ந்து விடும் என்று கருதித்தான் அவரை விடுதலை செய்திருக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உள்ளவர்கள் ஏன் சயனைடு என்ற நஞ்சை அருந்தினர் என்றால், தங்களால் இயக்கத்திற்கு அழிவோ அவப்பெயரோ ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகத்தான். மேலும் விடுதலைப்புலிகள் இயக்கம் மிகவும் கட்டுக்கோப்பான இயக்கம் என்று பெயர் பெற்ற இயக்கம். ஒவ்வொரு வீரருக்கும் அனைத்துவிதமான பயிற்சியும் கொடுக்கப்படும்.

அந்தப் பயிற்சிகளில் முழு கவனம் செலுத்தி வெற்றி பெற வேண்டும் என்பது அவர்களது கொள்கையாக இருந்திருக்கிறது. மேலும் அவ்வியக் கத்தில் தனிநபர் ஒழுக்கம் மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. இலங்கை அரசால், அங்கு வாழும் மக்களுக்கு அத்தியாவ சியமான பொருட்கள் மறுக்கப்பட்ட போது, புலிகளின் பிரதிநிதிகள் தமிழ்நாட்டில் இருந்து அத்தியாவ சியப் பொருட்களை இலங் கைக்கு எடுத்துச் சென்றனர். அவர்கள் அவ்வாறு செல்லும் போது பிறரால் வழிமறிக்கப்பட்டால் தாங்கள் தங்களது கடமையில் இருந்து விலகி விட்டோம், அல்லது கவனக்குறைவாக இருந்து விட்டோம், இதனால் இயக்கத்திற்கு கெட்டபெயர் வந்துவிடக் கூடாது என்று நஞ்சு அருந்தி உயிர் நீத்தனர்.

இந்த நிகழ்வுகளைப் பயன்படுத்தி விசாரணை அதிகாரிகள் ராசீவ் கொலையாளியைப் பிடித்த வுடன் அவர்கள் பயந்து, தங்களைத் தாங் களே மாய்த்துக் கெண்டனர் என்ற ஒரு பொய்ப் பிரச் சாரத்தைப் பரப்பினர்.

மேலும் டிக்சன் உயர்ந்த தலைமைப் பொறுப்பில் இருந்தாலும் பல நாடுகளுடன் தொடர்பில் இருந் தார். அவரை விசாரித்திருந்தால், சிவராசன் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்த காலத்தை யும் பின்னர் இயக்கத்தில் இருந்து விலகிய காலகட் டத்தையும், காரணத்தையும், பின்னர் இலங்கை அரசுடன் ஏற்படுத்திக் கொண்ட நெருக்கத்தையும், பின் எவ்வாறு கூலிப்படையில் சேர்ந்தார் என்ப தையும் ஆதாரத்துடன் தெரிவித்திருப்பார். இந்த உண்மையை மறைப்பதற்காக டிக்சனை விடுதலை செய்துவிட்டனர், பின்னர் அவர் இலங்கையில் காவல்துறையால் கைது செய்யப்பட்டார். இந்த நிகழ்வில் இந்திய விசாரணைக்குழு உண்மையாக நடந்து கொள்ளவில்லை, விசாரணை அறிக்கை பொய்யும் புரட்டும் மிகுந்து காணப்படுகிறது, நீதி ஏமாற்றப்பட்டிருக்கிறது என்பதுதான் நடுநிலை யாளர்களின் கருத்து.

**தொடரும்...**

# நட்பு

**எம். ஆர். வரலக்சுமி** பதினோராம் வகுப்பு.
அரும்பாக்கம். சென்னை.

இமைகளுக்கும் இதயத்திற்கும்
சிறு வித்தியாசம்
இமைகள் உன்னைப் பார்த்துத் துடிக்கும்
இதயம் உன்னை நினைத்துத் துடிக்கும்.
நல்ல காதலி இல்லாதவன்
துரதிஷ்டசாலி இல்லை
நல்ல நண்பன் இல்லாதவனும்
துரதிஷ்டசாலிதான்.

துன்பங்கள் நெருங்கி வரும் சமயத்தில்
தோழன் தான் கைகொடுப்பான்

கடலின் நீளத்தை அளக்க முடியாது
அது போலத்தான் நட்பும்

நிலவைப் போல் நீ தூரத்தில் இருந்தாலும்
நட்சத்திரம் போல் என் நினைவுகள்
உன்னையே சுற்றி நிற்கும்.

பன்னீரின் வாசம் எல்லோருக்கும்
பிடிக்கும்
ஆனால்
அது ரோஜாவின் கண்ணீர் என்பது
யாருக்குத் தெரியும்.

நீ ரசிக்க என்னிடம் அழகு இல்லை,
ஆனால்
நீ வசிக்க அழகிய இதயம் உண்டு
என்னிடம்.

உன்னை எதிரில் பார்த்த நாட்களைவிட
உன்னை எதிர்பார்த்த நாட்களே அதிகம்...

கடலைப் போல் நட்பு... அதில்
அலைகள் போல் இன்பம்...



தற்போது, செல்போன் மூலம் தம்மைத் தாமே படமெடுத்துக் கொள்ளும் ஆர்வம் எக்கச்சக்கமாக அதிகரித்திருக்கிறது. ஆனால் இவ்வாறு பட மெடுத்து வைக்கும் பலர், செல்போன்கள், கணினி குறித்து முழுமையாக அறிந்தவர்கள் அல்ல.

உதாரணத்துக்கு, தங்கள் செல்போனில் எடுக்கப் பட்ட அந்தரங்கப் புகைப்படங்கள், வீடியோக்களை 'டெலிட்' செய்தாலும் மீண்டும் அவற்றைப் பார்க்க முடியும் என்ற விஷயம் எத்தனை பேருக்குத் தெரியும்?

அதை அறியாமல்தான் பலரும் ஆர்வக் கோளாறில் தங்களின் அந்தரங்கக் காட்சிகளை செல்போனிலும், டிஜிட்டல் காமிராவிலும் பதிவு செய்து ரசிக்கிறார்கள். பின்னர் அழித்து விடுகி றார்கள். அதாவது 'டெலிட்' செய்துவிடுகிறார்கள்.

ஆனால் செல்போன் போன்ற மின்சாதனங்கள் என்றாவது ஒருநாள் பழுதடைந்து அவற்றைப் பழுது பார்க்க கடைகளில் கொடுக்கும்போது தான் பிரச்சனை ஏற்படுகிறது. சர்வீஸ் செய்யும் கடைக் காரர்கள் பழுதை நீக்கியதும், என்னென்ன படம் அல்லது வீடியோ அழிக்கப்பட்டிருக்கிறது என்று தேடிப் பார்த்து சிக்கலை ஏற்படுத்தி விடுகிறார்கள்.

அழிக்கப்பட்ட விஷயங்களை திரும்பப் பெறும் வசதி கொண்ட பல மீட்பு மென் பொருட்கள் இருக் கின்றன. இதன் மூலம் திரும்பப் பெறப் படும் வீடியோ மற் றும் புகைப் படங்க ளில் ஏதாவது ஏடாகூட மாக இருந்தால் அவை வெளிச்சுற்றுக்குப் போய்விடும் வாய்ப்பு அதிகம்.

இன்று நெருக்கமாக உள்ளவர்கள் கூட நாளை பிரியும் சூழ்நிலை ஏற்படலாம். அப்போது செல்போனில் அல்லது கணினியில் பதிவு செய்து வைத்திருக்கும் படங்கள் அல்லது வீடியோக்கள் பிரச்சினைகளை ஏற்படுத்தும். இருவரில் ஒருவரே கூட அடுத்தவரைப் பழிவாங்குவதற்காக படங் களைப் பரப்பிடவிடலாம்.

அதேபோல, பொது இடங்களில் நமக்குத் தெரியாமல் ரகசியமாகக் கண்காணிக்கும் காமி ராக்கள் அதிகரித்திருக்கின்றன. பிரித்து அறிய முடியாத அளவுக்கு நுண்ணிய காமிராக்கள் வந்து விட்டன. எனவே பொது இடங்களில் எச்சரிக்கை யாக இருப்பதோடு, நாகரிகமாகவும் நடந்து கொள்வது நல்லது.

எதுவும் அளவுக்கு மீறினால் நஞ்சு என்பது இன்றைய நவீன சாதனங்களுக்கும் பொருந்தும். எனவே செல்போன்களை அளவோடு, சுயகட்டுப் பாட்டோடு பயன்படுத்தினால் நிம்மதி நிலைக்கும்.

**உமா மகேசுவரி**



# கவனம் தேவை!


# பா.ச.க அரசின் சமஸ்கிருத மோகம்!

**வேர்மகள்**

நடுவண் அரசுப்பள்ளிகளான கேந்திரிய வித்யா லயா பள்ளிகளில் மூன்றாவது மொழியாக தற்போது மாணவர்கள் பயின்று வரும் ஜெர்மன் மொழியை நீக்கி விட்டு, அதற்குப் பதிலாக சமஸ்கிருதத்தை திணிக்க நடுவண் அரசு முடிவு செய்து நடப்புக்கு கொண்டு வர இருந்தது. இதை எதிர்த்து நாடு முழுவதும் கண்டனக் குரல்கள் வெளிப்பட்டன. இங்கு மட்டுமல்லாது ஜெர்மனி யிலும் இந்த அறிவிப்பு எதிரொலித்தது. ஜி20 மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்ற இந்திய தலைமை அமைச்சர் மோடியிடம் ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்க் கல் ஜெர்மன் மொழியை நீக்கக்கூடாது என்று வேண்டு கோள் விடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

அதன்பிறகு சமஸ்கிருதம் அல்லது ஏதாவது ஒரு இந்திய மொழியைப் படிக்கலாம் என நடுவண் அரசு அறிவித்துள்ளது. இதுபற்றி நடுவண் மனதவள மேம் பாட்டு அமைச்சர் ஸ்மிரிதி இரானி கூறியதாவது: கேந்தி ரிய வித்யாலயா பள்ளிகளில் மூன்றாவது மொழியாக ஜெர்மன் மொழியைப் பயிற்றுவிப்பதற்கு கடந்த 2011 ஆம் ஆண்டு ஜெர்மனியுடன் போடப்பட்ட ஒப்பந்தம் அரசியல் சட்டத்துக்கு எதிரானது. இந்த ஒப்பந்தம் எந்த அடிப் படையில் போடப்பட்டது என்பதை கண்டுபிடிக்க ஏற்க னவே விசாரணை நடந்து வருகிறது. இந்தப் பள்ளிகளுக் கான மூன்று மொழிக் கோட்பாடு தெளிவாக உள்ளது. எட்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 23 இந்திய மொழிகளில் ஏதாவது ஒன்றை மூன்றாவது மொழியாக மாணவர்கள் எடுத்துப் படிக்கலாம். அதன்படி இந்தப் பள்ளிகளில் சமஸ்கிருதத்தை கட்டாயப் பாடமாக்க முடியாது. நாங்கள் பிரெஞ்சு மொழியை கற்பிக்கிறோம். சீன மொழியை கற்பிக்கிறோம். அந்தவகையில், வெளி நாட்டு மொழியாக ஜெர்மன் மொழியும் தொடர்ந்து கற்பிக்கப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள் கிறேன் என்றார்.

இந்தியாவின் தலைமை அமைச்சர் நாட்டின் நலனுக் காக, வளர்ச்சிக்காக பாடுபடுகிறார் என்பது போன்ற தோற்றத்தை அவர் ஏற்படுத்திக் கொண்டிருந்தாலும், அவர் அமைச்சரவையில் இருக்கும் மதவாதிகள் சிலர் தங்களது மதத்தை நிலைநிறுத்த, பேச்சு வழக்கு மொழி யல்லாத சமஸ்கிருதத்தைப் பரப்ப பல்வேறு வழிகளில் தங்களது அதிகாரத்தை தவறான முறைகளில் செலுத்தி நேர்மை தவறி நடக்கின்றனர். இது ஜனநாயக நாட்டில், மதச்சார்பற்ற நாட்டில் நடக்கக் கூடிய செயல் அல்ல என்பதை அவர்கள் புரிந்து கொண்டு இந்திய அரசியல் சட்டத்திற்கு பாதகம் வந்துவிடாபடி நடக்க வேண்டும்.



# மறைக்கப்பட்ட உண்மைகள் மறுக்கப்பட்ட உரிமைகள்

புதுச்சேரி மாநிலம், கூடப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த வெங்கடபதி என்ற விவசாயிக்கு பத்மஸ்ரீ விருது டெல்லியில் வழங்கப்பட்டது. தனது 19வது வயது முதலே விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கினார். தனது முதல் ஆராய்ச்சியில் உருவான கனகாம்பரம் செடியை 1970ல் அறிமுகம் செய்தார். 100 ரகங்களை அறிமுகம் செய்துள்ளார். சவுக்கு மரத்தில் 100 புதிய ரகங்களைக் கண்டறிந்துள்ளார்.

மூன்று தலைமுறையாகவே விவசாயத்தில் ஈடுபடும் குடும்பத்தில் பிறந்த வெங்கடபதி, 4வது வரை மட்டுமே படித்தவர் என்பது குறிப்பிடதக்கது. இப்படிப்பட்டவர் பத்மஸ்ரீ விருது வாங்கியதை பெருமையாக வெளியில் சொல்ல வேண்டிய அரசாங்கமே அவரது தனி புகைப்படத்தை வெளியிடவில்லை. ஊடகங்கள் ஒரு சிலவற்றைத் தவிர, இந்த செய்தியை யாருமே வெளியிடவில்லை.

விவசாயம் தான் மனிதர்களுக்கு உயிர் நாடி, ஆனால், பொழுதுபோக்கு அம்சங்களான சினிமா, இசை, விளையாட்டு போன்றவற்றுக்காக விருது வாங்கியவர்களை எல்லாம் முன்னிலைப் படுத்துபவர்கள். விவசாயியை மதிக்கத் தவறிவிட்டனர்.

பத்மஸ்ரீ விருது வாங்கியவர்களுக்கான பாராட்டு விழாவை புது தில்லி, தமிழ்ச்சங்கம் நடத்தியது. அது குறித்த விளம்பரம் இரண்டு தினங்களுக்கு முன்பே தினசரிகளில் வெளிவந்தது. அந்த விளம்பரத்தில் விவசாயி வெங்கடபதியின் பெயர் இடம் பெறவில்லை. பசுமைவிகடன் மூலம் தில்லி தமிழ் சங்க நிர்வாகிகளின் கவனத்திற்கு இந்தத் தகவல் கொண்டு செல்லப்பட்டது. “கட்டாயம் அவரை அழைத்து பாராட்டுகிறோம்“ என்று சொன்னவர்கள் அதன் படியே சிறப்பாக பாராட்டியும் உள்ளார்கள். தேவையற்ற செய்திகளை வெளியிட்டு பிழைப்பு நடத்தும் இதழ்கள் இச்செய்தியை வெளியிடவில்லை. ஒருவேளை விவசாயம் தரம் தாழ்ந்ததாக நினைத்திருக்கலாம். இதுவே ஒரு சினிமா நட்சத்திரம் வாங்கி இருக்கிறார் என்றால் எத்தனை குடம் பாலாபிசேகம், வானுயர கட்டவுட்டுகள், வெடி என ஊரையே அமர்க்களப்படுத்தி இருப்பார்கள். விவசாயி ஆயிற்றே யார் கண்டு கொள்வார்கள்?



தொல்காப்பியன்

# சமையல் எரிவாயு மானியம் பெற

சமையல் எரிவாயு சிலிண்டருக்கான மானியத்தை நேரடியாகப் பெறும் திட்டம், இந்தியாவில் 54 மாவட்டங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் சனவரி ஒன்றாம் தேதியில் இருந்து இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இந்த நேரடி மானியத்தைப் பெறுவதற்காக அடுத்த ஆண்டு (2015 ஆம் ஆண்டு) மார்ச் 31 ஆம் தேதி வரை வாடிக்கையாளர்கள் விண்ணப்பிக்கலாம். இந்த வாய்ப்பை தவறவிட்டால், எரிவாயுக் கான நேரடி மானியத்தை பெறமுடியாமல் போய்விட வாய்ப்புள்ளது.

மானியத் திட்டத்தில் பயன்பெற வேண்டும் என்றால், எரிவாயு இணைப்பு உள்ளவர்களுக்கு, அவர்களின் பெயரில் வங்கிக்கணக்கு இருக்க வேண்டும். அவர்கள் முழுத்தொகை செலுத்தி எரிவாயு வாங்கினாலும், மத்திய அரசு அளிக்கும் மானியத்தொகை, அந்த வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டுவிடும். அந்த வகையில் எரிவாயுக்கான மானியத்தை இதன் மூலம் வாடிக்கையாளர் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் திட்டத்தில் சேர்ந்ததில் இருந்து மானியத்தொகை கிடைக்கத் தொடங்கி விடும். எரிவாயு சிலிண்டரை வாங்கிய மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் வங்கிக்கணக்கில் மானியத் தொகை வந்து சேர்ந்துவிடும்.

எரிவாயுக்கான நேரடி மானியத் திட்டத்தில் சேர்வதற்கு விண்ணப்பிக்கும் முறைகள் யாதெனில், யார் பெயரில் சிலிண்டர் இருக்கிறதோ, அவர் தனது எரிவாயு சிலிண்டர் முகவரை அணுக வேண்டும். தன்னிடமுள்ள ஆதார் எண் மற்றும் வங்கிக்கணக்கு எண்ணைக் குறிப்பிட்டு, அவர் கொடுக்கும் படிவம் 1, படிவம் 2 ஆகியவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும். படிவம் 1 ஐ வங்கியிலும் படிவம் 2 ஐ முகவரிடமும் வழங்க வேண்டும். ஆதார் அட்டை அல்லது எண் இல்லாவிட்டால் வங்கிக் கணக்குப் புத்தகத்தைக் காட்டி முகவரிடம் இருந்து படிவம் 3, படிவம் 4 ஆகியவற்றை வாங்கி பூர்த்தி செய்ய வேண்டும். பின்னர் படிவம் 3 ஐ வங்கியிலும், படிவம் 4 ஐ முகவரிடமும் கொடுக்க வேண்டும்.

வங்கியில் படிவம் செலுத்தப்பட்டது என்பதற்கு அத்தாட்சியாக, படிவத்தில் கடைசிப் பகுதியைக் கிழித்து, அதில் வங்கி முத்திரையைப் பதித்தும், கையெழுத்திட்டும் வழங்குவார்கள். அதைப் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். இந்த நடைமுறைகள் மூலம் எரிவாயுக்கான நேரடி மானியத்திட்டத்தில் சேர்ந்துவிடலாம். அதன் பின்னர் எப்போதும்போல் பணத்தைச் செலுத்தி சிலிண்டரை வாங்கிக் கொள்ளலாம். அதற்கான மானியத் தொகை வங்கிக் கணக்கில் வந்து சேர்ந்து விடும். என்று எண்ணெய் நிறுவன அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.



பொன்முடி



# தமிழீழப் பாவேந்தர் காசிஆனந்தன்




2

**இலங்கை - ஈழம்**

'இலங்கை' தூய தமிழ்ச் சொல்லாகும். இலங்குதல் ஒளிவிடுதல் என்னும் பொருளில் தோன்றியது. இலங்கை'யையே சிங்களவர்கள் லங்கா என்று ஆக்கிக்கொண்டார்கள். லக் என்னும் அழகு குறித்த சமற்கிருத வேரில் இருந்து லங்கா தோன்றியதாக அவர்கள் பூசி மெழுகுவதுண்டு. ஆனால் இன்றும் சிங்களவர்களின் பெயர்கள் இலங்கை ரத்னா இலங்கைக்கோன் என்றே உள்ளன. லங்கா கோன் என்றோ லங்கா ரத்னா என்றோ அவர்கள் பெயர்கள் இல்லை. இலங்கையையே அவர்கள் லங்கா ஆக்கினார்கள் என்பதற்கு இது ஒன்றே போதுமான சான்று எனலாம்.

'ஈழம்' என்னும் பொன்னைக் குறித்த தமிழ்ச் சொல் பொன்போல் ஒளிரும் நாடு என்ற பொருள் கொண்டது. இங்கும் இலங்குதலே பொருளாகும்.

சங்க இலக்கியத்தில் ஈழத்துப் பூதன் தேவனாரைச் சந்திக்கிறோம்.

இலங்கைத் தீவில் அமைந்துள்ள பண்டைத் துறைமுகங்கள் அனைத்தும் தமிழ்ப் பெயர்களைத் தாங்கி நிற்பதும் இலங்கைத்தீவு தமிழர் தாயகமே என்பதற்கு இன்னொரு சான்றாகும்.

தமிழீழத்தில் காங்கேயன்துறை, வல்வெட்டித் துறை, பருத்தித்துறை, மாந்தை, இலங்கைத்துறை, நாகத்தேவன்துறை, திருக்கோணமலை சிங்கள சிறீலங்காவில் மாத்துறை, கருந்துறை (களுத்துறை) பாணன் துறை, மாந்தை, இலங்கைத்துறை, நாகத் தேவன்துறை, திருக்கோணமலை சிங்கள சிறீலங் காவில் மாத்துறை, கருந்துறை (களுத்துறை) பாணன் துறை, தேவன்துறை ஆகிய இலங்கைத் தீவின் துறைமுகங்கள் அனைத்தும் தமிழ்ப் பெயர் களைத் தாங்கி நிற்பதைப் பார்க்கிறோம்.

**இரு தாயகங்கள்:**

**தேசிய இனம் என்றால் என்ன? ஓர் இனத் துக்கும் ஒரு தேசிய இனத்துக்கும் என்ன வேறு பாடு?**

தனக்கென ஒரு தாய்மொழி கொண்ட மக்கள் கூட்டம் ஓர் 'இனம்'.

மலேசியாவும் சிங்கப்பூரும் தென்னாப் பிரிக்காவும் மொரீசியசும் தமிழர் தாயகங்கள் அல்ல இங்கெல்லாம் தமிழ்மக்கள் தமிழைத் தாய்மொழி யாகக் கொண்ட ஓர் 'இனமாக' மட்டுமே வாழ் கிறார்கள்.

ஆனால், தமிழ்நாடும் தமிழீழமும் தமிழ் மக்களின் தாயங்களாகும். இவ்விரு தாயகங்களிலும் தமிழ்மக்கள் 50,00 ஆண்டுகள் தொடர் வரலாறு கொண்ட ஒரு 'தேசிய இனமாக' வாழ்கிறார்கள்.

**அறத்தின் போர்**

தமிழ்மொழி 50,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது. அதன் அகவை 50,000 ஆண்டுகள். சிங்கள மொழி கி.பி.5ஆம் நூற்றாண்டில் தோன்றியது. அதன் அகவை 1500 ஆண்டுகளே.

இலங்கைத் தீவில் 50,00 ஆண்டுகள் வரலாறு கொண்ட தமிழ்த்தேசிய இனத்தை 1500 ஆண்டுகள் வாழ்வு கொண்ட சிங்களத் தேசிய இனம் அழித் தொழிக்க முயல்வதை எதிர்த்து வெடித்த அறத்தின் போரே தமிழீழ விடுதலைப் போராகும்.

**தேய்ந்த தாயகங்கள்**

கி.மு.1500இல் ஆரியர்கள் அகண்ட தமிழர் தாயகமான இந்தியாவினுள் நுழைந்தார்கள். தமிழர்களின் தாய்மொழியான தமிழோடு வந்தேறி களான ஆரியர்களின் வடமொழி கலந்து புதிய மொழிகளும் இனங்களும் தோன்றின. இந்தி மராத்தி வங்காளம் பஞ்சாபி அசாமி ஒரிசா போன்ற மொழிகளும் இனங்களும் வடக்கில் தோன் றின. தெற்கில் கன்னடம் தெலுங்கு மலையாளம் ஆகிய மொழிகளும் இனங்களும் தோன்றின. அகண்ட பழந்தமிழ்த் தாயகமான நாவலந்தேயத்தில் (இந்தியா) 28 மாநிலங்களில் 27 மாநிலங்களை இழந்து இன்று தமிழர்கள் ஒரே ஒரு மாநிலத்தில் (தமிழ்நாடு) தேய்ந்து சிறுத்துக் கிடக்கிறோம்.

இலங்கைத் தீவு முழுவதும் முன்பு தமிழர் தாயகமாகவே இருந்தது. கி.மு.3ஆம் நூற்றாண்டில் அசோகன் காலத்தில் புத்தமதம் இலங்கையில் பரவிய போது புத்தமதத்தை இலங்கைக்குக் கொண்டு வந்த இந்திய வடமொழியாளர்களின் வாயில் இருந்த வடமொழியும் புத்த மதமொழி யான பாலிமொழியும் இலங்கைத் தீவில் வாழ்ந்த தமிழர்மொழியான தமிழ்மொழியோடு கலந்து சிங்கள மொழியும் சிங்கள இனமும் தோன்றின என்பதுதான் சிங்கள மொழித் தோற்றத்தின் உண்மை வரலாறாகும்.

சிங்களத் தேசிய இனத்தின் உருவாக்கத்தாலும் இனப்பரவலாலும் தமிழர் தாயகமாய் இருந்த இலங்கைத்தீவில் பெரும் பகுதியை இழந்து இன்று வடக்கு கிழக்கு என்னும் இரு மாகாணங்களில் சுருங்கி ஒடுங்கி நிற்கிறோம்..

◆


**அனைத்துவிதமான சுப நிகழ்ச்சிகளையும் இசையால் நிரப்ப, விருந்தினர்களை மகிழ்விக்க மிகச் சிறந்த இசைக்குழு துள்ளாத மனமும் துள்ளும் ஆர்கெஸ்ட்ரா**

9444361408
9941333857

அர்ஜுன் வழங்கும்

துள்ளாத மனமும் துள்ளும் ஆர்க்கெஸ்ட்ரா

இன்னிசை மழை

திருவான்மியூர், சென்னை-41.

## புரட்சிக்கவி 12

பாரதிதாசனார்



புரட்சிக்கவிஞர்

# இயற்கை

## அணில்

கீச்சென்று கத்தி – அணில்
கிளையொன்றில் ஓடிப் – பின்
வீச்சென்று பாய்ந்துதன் காதலன் வாலை
வெடுக்கென்று தான்கடிக்கும்
ஆச்சென்று சொல்லி – ஆண்
அணைக்க நெருங்கும் – உடன்
பாய்ச்சிய அம்பெனக் கீழ்த்தரை நோக்கிப்
பாய்ந்திடும் பெட்டை அணில்
மூச்சுடன் ஆணோ – அதன்
முதுகிற் குதிக்கும் – கொல்லர்
காய்ச்சும் இரும்பிடை நீர்த்துளி ஆகக்
கலந்திடும் இன்பத்திலே.
ஏச்சுக்கள் அச்சம் – தம்மில்
எளிமை வளப்பம் – சதிக்
கூச்சல் குழப்பங்கள் கொத்தடி மைத்தனம்
கொஞ்சமும் இல்லை அங்கே!

## வானும் முல்லையும்

எண்ணங்கள் போலே – விரி
வெத்தனை! கண்டாய் – இரு
கண்ணைக் கவர்ந்திடும் ஆயிரம் வண்ணங்கள்
கூடிச் சுடர்தரும் வான்!

வண்ணங்களைப் போய்க் – கரு
மாமுகில் உண்டு – பின்பு
பண்ணும் முழக்கத்தை, மின்னலை, அம்முகில்
பாய்ச்சிய வானவில்லை,

வண்ணக் கலாப – மயில்
பண்ணிய கூத்தை – அங்கு
வெண்முத்து மல்லிகை கண்டு சிரித்தனள்!
மேல்முத்தை வான் சொரிந்தான்!

விண்முத் தணிந்தாள் அவள்
மேனி சிலிர்த்தாள் – இதைக்
கண்ணுண்ண உண்ணக் கருத்தினி லின்பக்
கடல்வந்து பாய்ந்திடுதே!

◆

# பாலை நிலத்தில் ஒரு ஆர்டீசியன் ஊற்று!

வேலூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ரயில்வே நிலையம் பக்கத்தில் உள்ளது ஹோட்டல் ஏலகரி காலை ஏழு மணியில் இருந்து வயதான வர்கள். பெண்கள், மனநிலை, சரியில்லாதவர்கள் என்று ஒரு பாவப்பட்ட கூட்டமே வந்து தங்களுக்கு பிடித்த இட்லி, பூரி, தோசை, புரோட்டா போன்றவைகளை வாங்கி உட்கார்ந்து சாப்பிட்டு விட்டு கல்லாவில் உட்கார்ந்திருக்கும் கடை உரிமையாளர் நாகராஜிடம் காசுக்கு பதிலாக வணக்கம் மட்டும் தெரிவித்துவிட்டு செல்கின்றனர்.

இது போக நகரசுத்தி தொழிலாளர்கள் கை வண்டி இழுப்பவர்கள் போன்ற எளிய தொழிலா ளிகள் மற்றும் மாணவர்களுக்கு உணவுப் பண்டங் கள் பாதி விலைதான். மேலும் நாள் முழுவதும் கைக்குழந்தையுடன் பால் கேட்டு வருபவர்கள், கையில் காசு இருந்தால் கொடுக்கலாம் இல்லை என்றால் பாலை மட்டும் வாங்கிக் கொண்டு செல்லலாம்.

இந்த ஆச்சர்யத்தை நிகழ்த்திக்கொண்டு இருப் பவர் நாகராஜ். இதுதான் வாழ்க்கை என்று வாழும் இவரைப்பற்றி இன்னும் கொஞ்சம் விவரமாக பார்க்கலாம்.

ஏலகிரியில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவ ரான நாகராஜுக்கு ஏழாம் வகுப்பிற்கு மேல் படிப்பு வரவில்லை. குடும்பத்திற்கு பாரமாக இருக்க வேண்டாமே என்று எண்ணி ஓட்டல் தொழிலாளி யாகப் போனார். நீண்ட காலம் ஓட்டல் தொழி லாளியாக இருந்ததினால் இந்த தொழில் அத்துப் படியாக, தனியாக ஓட்டல் துவங்கினார். ஹோட் டல் ஏலகிரியில் இட்லி, தோசை, பூரி, புரோட்டா, குஸ்கா என்ற எல்லாமும் ருசியாக கிடைக்கும்.

நாகராஜ் தானே கடைக்கு தேவையான தரமான உணவுப் பொருளை தேடி வாங்குவதாலும், அதனை தரமான முறையில் தயாரிப்பதாலும், நியாயமான



விலையில் விற்பதாலும் நல்ல வியாபாரம் நடக்கும். வருடத்தில் 365 நாளும் இவரது கடை திறந்திருக்கும். இரவில் ஐந்து மணி நேரம் தூங்கும் நேரம் போக மீதம் இருக்கும் நேரம் முழுவதையும் கடையில்தான் செலவழிப்பார்.

இப்படியான சூழ்நிலையில்தான் ஒரு சம்பவம் இவரது கடைமுன் நடைபெற்றது. ரயில் ஜன்னல் வழியாக காலி குடிநீர் பாட்டிலை தூக்கி எறிவதை போல ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் அவ்வப்போது சிலரை தூக்கி எறியாத குறையாக ரயில்களில் இருந்து இறக்கிவிட்டு செல்வர். இப்படி வலுக்கட்டாயமாக இறக்கிவிடப்படுபவர்கள் பெரும்பாலும் பெண்களாகவும் அந்த பெண்களில் பெரும்பாலோனார் மனநிலை சரியில்லாதவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்களை இப்படி கல்நெஞ்சத்துடன் இங்கே இறக்கிவிட்டவர்கள் ஊருக்கு போனதும் காணாமல் போனதாக உறவுகளிடம் சொல்லி பொய்யாக தேடிக்கொண்டே இருப்பார்கள். இப்படி இறக்கிவிடப்படும் மன நோயாளிகளின் கதி என்ன? மன நோயாளிகள், ஒரு நகைக்கடையையோ, ஜவுளிக் கடையையோ தாண்டி போகும்போது அவர்களிடம் எந்தவித சலனமும் ஏற்படாது. அதே நேரம் உணவுப் பண்டங்கள் விற்கும் ஓட்டலையோ அல்லது டீக்கடையையோ தாண்டிப்போகும்போது உடலும் உள்ளமும் பசி என்ற சலனத்தை ஏற்படுத்தும் கண்ணில் ஓர் ஏக்கத்துடன் அங்கேயே நின்றுவிடுவார்கள்.

என்னதான் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் என்றாலும், பசி உணர்வு இருக்கத்தான் செய்யும் ஆனால் பசிக்குது என்று கேட்கத்தெரியாது. இப்படிப்பட்ட ஜீவன்கள் தனது கடையை ஏக்கத்துடன் பார்ப்பதை அறிந்ததும் பதறிப்போன நாகராஜ் அவர்களை அன்புடன் அழைத்து விருப்பப்பட்டதை சாப்பிடக் கொடுத்தார். நாகராஜ் கையால் நன்றாக சாப்பிட்டுவிட்டு கிடைத்த இடத்தில் தூங்கியவர்கள் மறுநாள் காலையிலும் வந்தனர்.

இந்த முறை வந்தபோது தங்களுடன் மேலும் சிலரை கூட்டிக்கொண்டு வந்தனர். சந்தோஷத்துடன் எதிர்கொண்ட நாகராஜ் அனைவருக்கும் அன்புடன் உணவு வழங்கினார். இவர்களைப் பார்த்து சில முதியோர்களும் உடல் ஊனமுற்றவர்களும் கடைக்கு வர இப்படியாக கிட்டத்தட்ட தினமும் நூறு நூற்றைம்பது பேர் காலை உணவு சாப்பிட வாடிக்கையாக ஹோட்டல் ஏலகிரிக்கு வந்து கொண்டு இருக்கின்றனர்.

அவர்கள் வருவார்கள், குட்மார்னிங் போல நாகராஜுக்கு ஒரு வணக்கத்தைப் போட்டுவிட்டு, வேண்டியதைச் சாப்பிட்டுவிட்டு திரும்பப் போகும்போது, ஒரு வணக்கத்தைப் போட்டுவிட்டு போய்விடுவார்கள். இதே போல துப்புரவுத் தொழிலாளர்கள் போன்ற ஏழைத்தொழிலாளர்கள் மற்றும் சீருடையுடன் வரும் ஏழை மாணவர்களுக்கு பாதி விலையில் உணவு தருகிறார். இதனால் இரண்டு இட்லி சாப்பிடுபவர்கள் நாலு இட்லி சாப்பிட்டுவிட்டு இன்னும் தெம்பாக ஆரோக்யமாக இருப்பார்கள் என்பது நாகராஜின் நம்பிக்கை.

எப்படி இதெல்லாம் முடிகிறது என்று கேட்டபோது, எனக்கு பசியோட அருமை தெரியும் ஆகவே என்னால முடிந்த அளவு இல்லாதவர்களுக்கும் இயலாதவர்களுக்கும் உணவு வழங்குகிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக எனது இந்தக் காரியத்திற்கு பெரிதும் துணையாக இருப்பவர் என் துணைவியார் சுஜாதாதான் என்கிறார் பெருமையாக. அன்றாடம் எங்கள் வீட்டு அடிப்படைச் செலவிற்கு தேவைப்படும் பணத்தைத் தவிர மற்ற பணம் அனைத்தையும் இதற்கே செலவழித்து விடுவோம் என்கிறார்.

விசேஷ நாட்களில் வியாபாரம் நன்கு நடந்து, கூடுதலாக லாபம் கிடைத்தால் அந்த லாப பணத்தில் பேனா, பென்சில் என்று வாங்கிக்கொண்டு போய் அருகில் உள்ள அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கிவிட்டு வந்துவிடுவேன். பணத்திற்காக வாழக் கூடாது என்ற கொள்கையில் இருவரும் உறுதியாக இருக்கிறோம். இன்னும் வருமானம் கூடுதலாக கிடைத்தால் மதிய உணவும். இரவு உணவும் கூட வழங்க எண்ணியுள்ளோம். கடையும், குடியிருக்கும் வீடும் வாடகைதான். பாங்க் இருப்பு எதுவும் கிடையாது. கால்பவுன் தோடும் மூன்று பிள்ளைகளும்தான் எங்கள் சொத்து.

எங்கள் பிள்ளைகளையும் மற்றவர்களுக்கு உதவும் வாழ்க்கைதான் வாழவேண்டும். ஒருக்காலத்திலும் பணத்தின் மீது ஆசை வைக்கக்கூடாது என்று சொல்லிக்கொடுத்து வளர்க்கிறோம். சுஜாதா ஒரு வேலைக்கு தயாராகிக்கொண்டு இருக்கிறார். வேலை கிடைத்ததும் அந்தச் சம்பளத்தில் நமது குடும்பத்தை நடத்திக்கொள்வோம். கடை வருமானம் முழுவதையும் ஏழை, எளியவர்களுக்கு உணவு வழங்குவதிலேயே செலவழிப்போம் என்றும் சொல்லியுள்ளார்.

நாங்கள் செய்யும் இந்தக் காரியத்தை சேவை, தொண்டு என்றெல்லாம் சொல்லி எங்களை பெருமைப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. பசிக்கும் சம மனிதர்களுக்கு செய்யும் சிறு உதவி அவ்வளவுதான் என்கின்றனர். கடையில் வேலை பார்ப்பவர்கள் பசியோடு வருபவர்களை அலட்சி

யப்படுத்தி விடக்கூடாது. அவமானம் ஏற்படும்படி பேசிவிடக்கூடாது என்பதற்காக எங்கு இருந்தாலும் காலையில் நாகராஜ் கடைக்கு வந்துவிடுகிறார்.

தானே அவர்களை வரவேற்று உணவு வழங்குகிறார். இதற்காக இவர் வெளியூருக்கும் தற்போது போவது கிடையாது. உறவு, விசேஷம் என்பதைக்கூட இந்த நேரம் தாண்டிதான் வைத்துக் கொள்கிறார் உங்களோடு சேர்ந்து நாங்களும் சேவை செய்கிறோம் என்றும், ட்ரஸ்ட் ஆரம்பித்து முறைப்படுத்திச் செய்யுங்கள் என்றும், எவ்வளவு பணம் வேண்டும் உங்களுக்கு மாதாமாதம் அனுப்பு கிறோம் என்றும், நிறைய பேர் சொல்லி வருகிறார் கள் அதை அன்போடு மறுத்து விடுகிறார்.

காரணம் நாங்கள் எங்கள் போக்கில் எங்கள் மனதிருப்திக்கு ஏதோ செய்கிறோம். பாராட்டு கிடைக்கும், பணம் கிடைக்கும், உதவி கிடைக்கும் என்றெல்லாம் எதிர்பார்த்துச் செய்யவில்லை. ஆகவே எங்களுக்கு நல்ல ஆரோக்கியமும் இதே போல நியாயமான வருமானமும் வந்தால் போதும் அதை தாண்டி மக்களோட ஆசீர்வாதம் மட்டும் போதும் என்று சொல்லுகிறார் நாகராஜ்.

இதையெல்லாம் எப்படிச் சமாளிக்கிறீர்கள் என்ற கேள்விக்கு இவர்களுக்கென்று தனியாக உலை வைக்கப்போதில்லை, வழக்கமாக சமைக்கும் அளவோடு கொஞ்சம் கூடுதலாக சமைக்கிறேன், 5 கிலோ மாவு புரோட்டோ போட்டாலும் 10 கிலோ மாவு போட்டாலும் மாஸ்டருக்கு ஒரே கூலிதான் எரிபொருளும் ஏறக்குறைய ஒரே அளவில்தான் செலவாகிறது.

சில ஆயிரம் ரூபாய் வருவாய் இழப்புதான் என்றாலும் எனக்கு குடும்பம் நடத்தத் தேவையான லாபம் கிடைக்கிறது. மனதுக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது என்கிறார் வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் 'வாடி நிற்கும்' நாகராஜ்.

முகநூலில் இருந்து... **அமல்ராஜ்** ◆



# தலையங்க விமர்சனம் நூறாவது அமர்வு

**த**லையங்க விமர்சனம் என்ற தலைப்பில் வாரந்தோறும் ஊடகவியலாளர்களையும், அறிஞர்களையும் அழைத்து, அந்த வாரத்தில் அச்சு ஊடகங்களில் வெளிவந்த தலையங்கங்கள் பற்றி அவர்களைப் பேசவைத்து, அவர்களிடம் தேவையான விளக்கங்களையும் பெற்றுக் கொள்கிற ஒரு பயன்தரத்தக்க கூட்டத்தை நடத்தி வருகிறார் திரு. ஜோதிராமலிங்கம் அவர்கள்.

தொடர்ந்து நூறு வாரங்களாக நடத்தி முடித்திருக்கிறார். ஞாயிற்றுக்கிழமை மாலை வேளைகளில் நடக்கும் இந்தக் கூட்டங்களுக்கு தவறாமல் வருகை தரும் அறிவு தேடும் அன்பர்களும் இருக்கிறார்கள். புதியவர்களும் வருகிறார்கள். இந்தக் கூட்டங்களை நேரம் தவறாமல், ஞாற்றுக்கிழமை மாலை வேளைகளில் தொடர்ந்து நடத்தி, நூறாவது அமர்வை எட்டியிருக்கிறார் ஜோதிராமலிங்கம்.

நூறாவது அமர்வை வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். நூறாவது அமர்வாக மட்டுமல்ல, வரலாற்று ஆய்வாளர், பேராசிரியர் எம்.எஸ்.எஸ். பாண்டியன் அவர்களது படத்திறப்பு, நினைவேந்தல் நிகழ்ச்சியாகவும் நடந்தேறியது. சமூக மாற்றமும் ஊடகங்களும் என்ற தலைப்பில் கருத்தரங்கமும் நடந்தது. நெல்சன் சேவியர், டான் அசோக், ஜீவசகாப்தன், எழிலரன், வி. எம். சுப்பையா, செல்வராஜ், ரகுமான், அசீப், மணிகண்டன் ஆகியோர் கருத்துக்களை எடுத்து வைத்தனர்.

தொடர்ந்து எம்.எஸ்.எஸ். பாண்டியன் அவர்களது படத்திறப்பு நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் வரவேற்புரையை திரு. இளங்கோ சுப்ரமணியன் அவர்கள் அறிவியல் உரையாக மேம்படுத்தி அறிவுப்பூர்வமாகப் பேசினார். நிச்சயமின்மைக் கோட்பாடு வேதத்திலிருந்து எடுக்கப்பட்டது என்ற உளறல்களை கொடூரமான, குரூரமான முட்டாள்தனம் என்று விளக்கிப் பேசினார். தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் துணை உள்ளுறை ஆசிரியர் திரு பாபு ஜெயக்குமார் அவர்கள் பேசுகையில், திராவிடியன் ஆர்ட்டிகல் வாங்க வேண்டும் என்றால் நாங்கள் எம்.எஸ்.எஸ். பாண்டியன் அவர்களைத்தான் அணுகுவோம். விளக்கங்களும், கட்டுரைகளும் அவர்தான் சரியாகத் தருவார். அவரால் மட்டும்தான் மிகச்சரியாகச் சொல்ல முடியும் என்பது அனைவருக்கும் தெரியும் என்றார்.

புதியதலைமுறை தொலைக்காட்சியின் முதுநிலைஆசிரியர் திரு. குணசேகரன் அவர்கள் பேசுகையில் எம்.எஸ்.எஸ். பாண்டியன் தோற்றுவிட்டதைப் போல் பேசத் தேவையில்லை. கருத்துகளைச் சொல்லக்கூடிய உயர்நிலைக்கு தமிழர்கள் வந்திருக்கிறார்கள், சிறுபான்மையினர், ஒடுக்கப்பட்டவர்கள் வந்திருக்கிறார்கள் என்றார். தொடர்ந்து பேசிய எம்.எஸ்.எஸ். பாண்டியன் அவர்களது மாணவர் கலையரசன், என்போன்ற மாணவர்களுக்கு எம்.எஸ்.எஸ். பாண்டியன் அவர்கள் ஆசிரியர் மட்டுமல்ல, தந்தையும்கூட எதற்கும் அஞ்சாதவர், சமரசமற்று பார்ப்பணியத்துடன் போராடியவர். திராவிடம்தான் நமது சொத்து என்று சொல்லுவார். திராவிடத்தைச் சொல்ல அவர் இப்போது இல்லை. அறிவுதான் அவரது ஆயுதம். ஆங்கில ஊடகத்தில் நமது தமிழர்கள் வரவேண்டும் என்றார். நாம் அவரது அவாவை பூர்த்தி செய்வதுதான் நாம் அவருக்குச் செய்யும் நன்றி என்றார்.

விடுதலை ஆசிரியர் கி. வீரமணி அவர்கள், தொடர்ந்து நூறு வாரங்கள் தலையங்க விமர்சன அமர்வை நடத்தி முடித்த ஜோதிராமலிங்கத்தைப் பாராட்டினார். அன்பிற்கும் பாராட்டுதலுக்கும் உரித்தான ஜோதிராமலிங்கம் திராவிடக் கொள்கைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்த நிகழ்வு ஒவ்வொரு ஞாயிறு அன்றும் நடக்கிறது என்றால் இது ஒரு சாதனை. சில ஆண்டுகளுக்கு முன் ஞாயிற்றுக்கிழமை ஒருநாள் மட்டும் பரப்புரை வைத்துக் கொள்ளலாம் மற்ற நாட்கள் வேண்டாம் என்பார் பெரியார். இப்போது தொலைக்காட்சி வந்துவிட்டதால் ஞாயிற்றுக்கிழமையைத் தவிர பிற நாட்களில் பேச அழைக்கிறார்கள். ஆழமான கருத்துப் பதிவுகளைக் கொண்ட இந்த நிகழ்ச்சிக்கு எனது வாழ்த்துகள். நான் வந்ததே இவர்களைப் பாராட்டத்தான்.

பலர் முழுமையான திராவிடப் புரிதலோடு இல்லை. இப்பவும் பலருக்கு அறிவு இருக்கிறது, துணிவு இல்லை. பெரியார் எனக்கு மட்டும்தான் தெரியும் என்பதல்ல. தெரிந்தவர்கள் அஞ்சுவார்கள், அஞ்சி அஞ்சிச் சாவார்கள். இதுதான் பார்ப்பனனுக்கும் நமக்குமுள்ள வேறுபாடு. அவன் ஒருவன் இருந்தால் விசமத்தைச் செய்வான். நூறு பேர் இருந்தால் செய்யமாட்டான். எம்.எஸ்.எஸ். பாண்டியன் அவர்கள் திராவிடத்திற்குக் கிடைத்த ஆராய்ச்சியாளர். பன்னீர் செல்வம் இந்த இயக்கத்தில் இருந்தார். விமானவிபத்தில் இளவயதில் மரணமடைந்தார். அவரைப் போல் எம்.எஸ்.எஸ். பாண்டியன் அவர்களும் மறைந்துவிட்டார். 57 வயது இறந்து போகக்கூடிய வயதா? இது நியாயமற்ற மறைவு. இவர் நோயில் படுத்தவர் இல்லை. ஒருமுறைகூட மருத்துவமனை சென்றவரில்லை. நாம் எம்.எஸ்.எஸ். பாண்டியன் போல் பல்லாயிரம் எம்.எஸ்.எஸ். பாண்டியன்களை உருவாக்குவோம் என்றார்.

வாய்ஸ் ஆஃப் ஓபிசி (ஆங்கிலம்) ஆசிரியர் திரு வேயுறுதோளிபங்கன் அவர்கள் இதுவரை நடந்த தலையங்க விமர்சன அமர்வுகள் பற்றி விரிவாகக் கூறி தனது நன்றிரையை நிறைவு செய்தார்.

◆


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**


மனிதமே முதன்மை !
முற்றம்
பல்சுவை திங்களிதழ்
வாழ்த்துகள்
மனிதமே முதன்மை என்ற உங்கள்
சிந்தனையை வரலாற்றுப் புரட்சி எனலாம் ;
என் ஊடகவியலின் வழிகாட்டியே
உம்முடன் கலந்துரையாடி கருத்துகளைப் பகிர்ந்தது
என் முன்னேற்றதிற்குப் பாதையாய் முன்னே செல்கிறது.
வண்ண வண்ண உன் எண்ணம்
உன் கருப்பு 'மை' எழுதுகோலின் முனை கூட
தமிழ் முதன்மை என்று
தமிழனை எழுச்சி கொள்ளச் செய்கிறது.
மானுட இலக்கியத்தின் அடையாளமே !
முற்றம் இதழ் ஆசிரியர் ஐயா விசவனூர் தளபதியாரே !
வாழ்க ! நீங்கள் வளமுடன்.
முற்றம் இதழுக்கு ஆதரவளித்த பெருமைமிகு வாசகர்கள்,
சந்தாதாரர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் அனைவருக்கும்
கிறிஸ்துமஸ் , புத்தாண்டு நல்வாழ்த்துகள்.
- S.V.Jai . இமயவரம்பன். B.sc.,M.A.,B.L.
முற்றம் - துணை ஆசிரியர்.
J. திருமாவளவன்.,M.A
2015
Happy New Year

MUTRAM - Tamil & English Monhtly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

